**தலைப்பு 258 – கண்டி மாவட்ட செயலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கண்டி மாவட்ட செயலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கண்டி மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய விரிவாக முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூன் 15 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந் நிதிக் கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கண்டி மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் கண்டி மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாகவும்.

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.3 (ஆ) மற்றும் (எ) பந்திகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களின் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்காமை**

2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்தேவைப்பாடுகளுக்கு புறம்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்கள் மாவட்ட செயலகத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 2,979,869 செலவினம் கட்டுநிதிச் சீராக்கக் கணக்கிற்கு சீராக்கப்பட்டிருக்கவில்லை. | ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்கள் மாவட்ட செயலகத்திற்காக செலவிடப்பட்ட செலவினம் கட்டுநிதிச் சீராக்கக் கணக்கில் சீராக்கப்பட வேண்டும். | மாவட்ட செயலகத்திற்காக ஏனைய திணைக்களங்கனளிால் மூலம் புகையிரத ஆணைச் சீட்டிற்கே செலவிடப்பட்ட பெறுமதியாகும். அது 1003 செலவு விடயத்திலிருந்து செலவிடப்பட்ட செலவினமாக இருந்ததுடன் நிதிச் செயலாற்றல் கூற்றில் சம்பளம், வேதனங்கள் மற்றும் ஏனைய ஊழியர் நலன்களிற்காக சுட்டிக் காட்டப்பட்ட ரூபா 1,138,996,969 தொகையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அது மீண்டும் கட்டுநிதி சீராக்க |

| | | | |
|---|---|---|---|
| | | | கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டால் கட்டுநிதி அப்பெறுமானத்தினால் வேறுபடுவதால் இப்பெறுமதி கட்டுநிதி சீராக்க கணக்கிற்கு செலவு வைக்கப்படவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | திறைசேரி பதிவேடுகளின் பிரகாரம் மற்றும் திரட்டிய பரீட்சை மீதிகளின் பிரகாரம் வைப்பு பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவு வேறுபாடு முறையே 114,992 மற்றும் ரூபா 82,345 முற்பண பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளின் வேறுபாடு முறையே ரூபா 11,188,872 மற்றும் ரூபா 637,518 ஆகவும் கட்டுநிதி சீராக்க கணக்கிற்கு சீராக்கப்பட்டிருக்கவில்லை. | திறைசேரி பதிவேடுகள் மற்றும் திணைக்கள பதிவேடுகளின் பிரகாரம் வைப்பு பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவு, முற்பண பெறுவனவு மற்றும் கொடுப்பனவு வேறுபாடு கட்டுநிதிக் கணக்கிற்கு சீராக்கப்பட வேண்டும். | திறைசேரி பதிவேடுகள் திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் வைப்பு கணக்கிலும் முற்பணக் கணக்கிலும் வேறுபாடொன்று இல்லாமையால் அவ்வாறான சீராக்கமொன்று தேவையில்லை. |
| (இ) | மாவட்ட செயலகம் மற்றும் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களத்திற்காக செலவிடப்பட்ட தேறிய செலவினம் திரட்டிய பரீட்சை மீதியின் பிரகாரம் ரூபா 6,510,917,896 ஆக இருந்த போதும், கட்டுநிதி சீராக்கல் கணக்கிற்கு அப்பெறுமதி ரூபா 6,602,134,826 என அதாவது ரூபா 91,216,930 கூடுதலாக சீராக்கப்பட்டிருந்தது. | மாவட்ட செயலகத்தினால் ஏனைய அமைச்சு மற்றும் திணைக்களங்களுக்காக செலவிடப்பட்ட தேறிய செலவினம் கட்டுநிதிச் சீராக்கக் கணக்கிற்கு சீராக்கப்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்கள் திறைசேரியின் மாதாந்தம் சமர்ப்பிக்கப்படும் கணக்கு பொழிப்புக்களின் கூட்டுத்தொகை பெற்றுக் கொள்ளப்பட்டே தயாரிக்கப்படுவதுடன் NEW CIGAS நிகழ்ச்சி தொடர்பாக பொது திறைசேரியின் அரச கணக்குகள் திணைக்களத்தினால் அவ்வவ்போது புதிய சேர்க்கைகள் (Version) சமர்ப்பித்தலின் காரணமாக திரட்டிய பரீட்சை மீதிகளின் பெறுமதி திரட்டிய பெறுமதிகளைக் கூட்டும் போது வேறுபாடுகள் இடம்பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் சீராக்க கணக்குகளினதும் காசுப்பாய்ச்சல் கூற்றில் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களத்திற்காக செலவிடப்பட்ட செலவினம் ரூபா 6,602,134,826 ஆக இருந்தது. |

### 1.6.2 நிதிச் செயலாற்றல் கூற்று

கீழே காட்டப்பட்டுள்ள கணக்கீட்டு குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 7(ii) பந்தியின் பிரகாரம் ஏனைய பெறுவனவுகளாக ரூபா 417,607,948 தொகை ஏ.சீ.எ 3 மாதிரியில் உட்படுத்தப்பட வேண்டிய போதிலும், ரூபா 512,218,949 அதாவது 94,611,221 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | மாவட்ட செயலகத்தினால் ஏனைய திணைக்களங்களுக்காக சேகரிக்கப்படும் தேறிய வருமானம் நிதிச் செயலாற்றல் அறிக்கையில் ஏனைய பெறுவனவுகளின் கீழ் சரியாக காண்பிக்கப்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்கள் மாதாந்த பொழிப்புக்களின் உள்ளவாறான பெறுமதிகளின் கூட்டுத்தொகை கருத்திற் கொள்ளப்பட்டு தயாரிக்கப்படுவதாகவும் வருமானத்திலிருந்து மீளச் செலுத்தல்கள் கழித்து சீராக்கல் நடைமுறைச் சாத்தியமற்றதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | திறைசேரி பதிவேடுகளின் பிரகாரம் வைப்புக்களின் பெறுவனவு கூட்டுத்தொகை மற்றும் வைப்புக்கள் கொடுப்பனவுகளின் கூட்டுத்தொகை முறையே ரூபா 1,137,279,685 மற்றும் ரூபா 759,218,566 ஆக இருந்தன. நிதிச் செயலாற்றல் கூற்றில் அப்பெறுமதி முறையே ரூபா 1,137,418,505 மற்றும் ரூபா 759,375,136 என முறையே ரூபா 138,820 மற்றும் ரூபா 156,570 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் அறிவுறுத்தலின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது வைப்புக்கள் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள், மாதாந்த கணக்கு பொழிப்புக்களிலிருந்து எடுக்கப்பட்ட புள்ளி விபரங்கள் மூலம் பெற்றுக் கொண்டதாகவும் மாவட்ட செயலகத்தின் கட்டுநிதிக் கணக்கில் ஏனைய திணைக்களங்களுக்கு உரிய வைப்புக்கள் பெறுவனவு மற்றும் கொடுப்பனவு காணப்படுவதுடன் அவற்றை அகற்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க முடியாதுள்ளது. |

### 1.6.3 நிதிச் நிலைமை தொடர்பான கூற்று

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டினதும் மீளாய்வாண்டினதும் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான மாதிரிகளின் பிரகாரம் அலுவலக உபகரண மீதி 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் 2019 சனவரி 01 இல் உள்ளவாறும் முறையே ரூபா 21,343,595 மற்றும் ரூபா 22,096,600 | வேறுபாடுகளுக்கு காரணங்கள் இனங்காணப்பட்டு சரியான கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட வேண்டும். | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அலுவலக உபகரணங்கள் பெறுமதி சரியாக காட்டப்பட்டள்ளது. திறைசேரியால் அறிமுகப்படுத்தப்பட்ட New Cigas Web Interface மூலம் வலையமைப்பு முறைமையின் பிரகாரம் இச்சொத்துக்களுக்குரிய |

| | | | |
|---|---|---|---|
| | என குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டின் இறுதி மீதி மற்றும் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதிக்கு இடையே ரூபா 753,005 ஆன வேறுபாடொன்று வெளிப்படுத்தப் பட்டதுடன் அது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | தரவுகளை உள்ளடக்கியதுடன் சரியாக கணக்கீடு செய்யப்பட்டதால் 2019 சனவரி 01 இல் உள்ளவாறு இச்சொத்துக்களின் பெறுமதி ரூபா 22,096,600 ஆக இருந்தது. அது சரியாக 2019 சனவரி 01 இல் உள்ளவாறு மீதியாக காண்பிக்கப்பட்ட போது அந்த ரூபா 753,005 ஆன வேறுபாடு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை என ஏற்றுக் கொள்வதாகவும் |
| (ஆ) | நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான மாதிரி, திறைசேரி சொத்துக்கள் அறிக்கையுடன் ஒப்பிடும் போது ஆரம்ப மீதிகளின் 07 சொத்து உருப்படிகளின் ரூபா 43,059,865 ஆன பெறுமதியில் திறைசேரி சொத்துக்கள் அறிக்கையில் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் மேலும், 02 சொத்து உருப்படிகளில் ரூபா 43,850 ஆன பெறுமதி திறைசேரி சொத்துக்கள் அறிக்கையில் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும், இறுதி மீதிகளின் 05 சொத்து உருப்படிகளில் ரூபா 64,990,920 ஆன பெறுமதியொன்று திறைசேரி சொத்துக்கள் அறிக்கையில் குறைத்தும் ஒரு சொத்து உருப்படிகள் ரூபா 821,584 ஆன பெறுமதியொன்று திறைசேரி அறிக்கையில் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | வேறுபாடுகளுக்கு காரணங்கள் இனங்காணப்பட்டு சரியான கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட வேண்டும்.<br>. | நிதியல்லாத சொத்துக்களை கணனி மயப்படுத்துவதற்காக கீழே காட்டப்பட்டுள்ள வகையில் இரண்டு பிரதான சந்தர்ப்பங்களின் கீழ் தற்போது பதிவு செய்யும் போது பதிவு செய்யும் நடைமுறையொன்று திறைசேரியின் அரச கணக்குகள் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது<br><br>1 New Cigas கணனி நிகழ்ச்சித்திட்டத்தில் நாளாந்தம் கொடுக்கல் வாங்கல பதிவு செய்யும் திறைசேரியின் அரச கணக்குகள் திணைக்களம், தனது உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் சந்தர்ப்பத்தில் நிதியல்லாத சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.<br><br>2 திறைசேரியின் அரச கணக்குகள் திணைக்களம், தனது உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இணையத்தளங்கள் மூலம் (Cigas Web Interface) பதிவு ஏற்றுவதன் மூலம் (Upload) மூலம் நிதியல்லாத சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட்டமை. |

| | | | |
|---|---|---|---|
| | | | மேலே தெளிவுபடுத்தப்பட்ட இரண்டு வகையிலும் பதிவு செய்யும் போது திணைக்களத்தினால் கணக்கீடு செய்யப்பட்ட நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதி திறைசேரி சொத்துக்கள் அறிக்கையில் (Bos Report) பெறுமதிக்கு சமமானது.<br><br>New Cigas கணனி நிகழ்ச்சி மூலம் கணக்கீடு செய்யப்பட்ட நிதியல்லாத சொத்துக்கள் திறைசேரி அறிமுகப்படுத்தியுள்ள Cigas Web Interface இற்கு பதிவேற்றும் போது வேறுபடுவதால் இவ்வேறுபாடு தென்பட்டதாகவும். |
| (இ) | திறைசேரி சொத்துக்கள் அறிக்கையில் ஆண்டில் கொள்வனவு ரூபா 77,649,584 என காண்பிக்கப்பட்டிருந்த போதும், நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான மாதிரியில் ரூபா 107,540,209 என காண்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 29,890,625 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | வேறுபாடுகளுக்கு காரணங்கள் இனங்காணப்பட்டு சரியான கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி ஒவ்வொரு சொத்து தொகுதிக்காக தொடர்பாக திணைக்களத்தினால் நாளாந்தம் (New Cigas) நிகழ்ச்சித்திட்டம் கணக்கீடு செய்யப்பட்ட சரியான பெறுமதியாகும். இச்சொத்துக்களின் வகை திறைசேரி அறிமுகப்படுத்தியுள்ள Cigas web interface இற்கு upload பதிவேற்றும் போது வேறுபடுவதால் இம்மீதிகளுக்கு இடையே இவ்வேறுபாடு தென்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஈ) | நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான மாதிரியில் ஆண்டில் கைதவிர்ப்பாக ஏனைய நிறுவனங்களிலிருந்து மாற்றங்களின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 4,884,090 பெறுமதி நிதியல்லாத சொத்துக்களை பதிவு செய்யும் போது இடம்பெற்ற தவறுகள் சீராக்கங்களாக இருந்ததுடன் சொத்துக்கள் கையேற்றலின் கீழ் ஏனைய நிறுவனங்களிலிருந்து மாற்றங்களின் கீழ் காண்பிக்கப்பட்ட ரூபா 52,743,323 பெறுமதிக்காக அட்டவணை சமர்ப்பிக்கப்படவில்லை. | வேறுபாடுகளுக்கு காரணங்கள் இனங்காணப்பட்டு சரியான கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட வேண்டியதுடன் கணக்காய்விற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் | ஏசீஏ-6 மாதிரியில் ஆண்டினுள் சொத்துக்கள் கையேற்றலின் கீழ் ஏனைய நிறுவனங்களிலிருந்து மாற்றல்களாக 21 அலுவலகங்களின் கீழே குறிப்பிடப்பட்ட விடயங்களே பதிவு செய்யப்பட்டிருந்தன.<br><br>1 ஏனைய திணைக்களங்கள் மற்றும் அமைச்சிலிருந்து மாவட்ட செயலகத்திற்கு அல்லது பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்படுவதன் மூலம் கிடைத்துள்ள சொத்துக்களின் பெறுமதி |

| | | | |
|---|---|---|---|
| | | | 2 இதுவரை மதிப்பீடு செய்யப்படாத காணி மற்றும் கட்டிடங்கள், அலுவலக உபகரணங்கள் போன்ற சொத்துக்கள் இனங்காணப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் நடப்பாண்டின் போது கணக்கீடு செய்யப்பட்ட பெறுமதி<br>3 New Cigas கணனி மூலம் நாளாந்த கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யும் போது சொத்துக்களின் வகை அறிக்கை இடும்போது ஏற்பட்ட தவறுகளை சீராக்குதல்.<br>ஏசீஏ 6 மாதிரியின் ஆண்டில் கைதவிர்ப்புக்களின் கீழ் நிதியல்லாத சொத்துக்களை பதிவு செய்யும் போது ஏற்பட்ட தவறினை திருத்தம் செய்வதற்காகவே ஏனைய நிறுவனங்களில் மாற்றல்களாக பதிவு செய்யப்பட்டுள்ளது. |
| (உ) | 2019 ஆம் ஆண்டிலிருந்து நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கைதவிர்க்கப்பட்டவற்றின் பெறுமதி திறைசேரி சொத்துக்கள் தொடர்பான அறிக்கையின் இறுதி மீதிகளுடன் ஒப்பிடும் போது 04 சொத்து உருப்படிகள் ரூபா 24,638,358 ஆன பெறுமதியொன்று திறைசேரி சொத்துக்கள் அறிக்கையில் கூடுதலாகவும் சொத்துக்கள் உருப்படியொன்று ரூபா 87,355 ஆன பெறுமதி திறைசேரி சொத்துக்கள் அறிக்கையில் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | வேறுபாடுகளுக்கு காரணங்கள் இனங்காணப்பட்டு சரியான கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட வேண்டும். | ஏசீஏ 6 நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் கைதவிர்ப்புக்களின் கீழ் விற்பனை மூலம் கைதவிர்ப்பு மற்றும் மாற்றல்கள் மூலம் கைதவிர்ப்புக்கள் வெவ்வேறாக காண்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் சொத்துக்கள் தொகுதி இல் 6112205 மற்றும் 6141100 என அவை தவிர ஏனைய சொத்துக்கள் கைதவிர்ப்பு பெறுமதி கணக்காய்வினால் சுட்டிக் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் சரியானதாகும். New Cigas கணனி நிகழ்ச்சி மூலம் அலுவலகங்களிலிருந்து கணக்கீடு செய்யப்பட்ட கைதவிர்ப்பு பெறுமதி சரியாக நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யப்பட்டிருந்த போதும் திறைசேரி Cigas web interface இற்கு Upload பதிவேற்றும் போது வேறுபடுவதால் இம்மீதிகளுக்கு இடையே இவ்வேறுபாடு தென்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான மாதிரியின் பிரகாரம் மீளாய்வாண்டில் இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் கைதவிர்ப்பு பெறுமதி ரூபா 1,956,138 எனக் காண்பிக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டில் மாவட்ட செயலகத்தினாலும் 08 பிரதேச செயலகங்களினாலும் மேற்கொள்ளப்பட்ட ரூபா 140,667 ஆன கைதவிர்ப்பு பெறுமதி அதில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்திற்குரிய சகல கைதவிர்ப்பு பெறுமதி நிதியல்லாத சொத்துக்களின் கீழ் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டும். | நிதியல்லாத சொத்துக்களின் கீழ் மேலும் பதிவு செய்ய வேண்டிய ரூபா 140,667 பெறுமதிக்கு உரிய அலுவலகங்கள் அறிவுறுத்தப்பட்டு 2020 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (எ) | 6 பிரதேச செயலகங்களுக்குரிய 14 கிராம சேவையாளர் அலுவலகங்கள், 1 வயோதிபர் இல்லம், 3 சேவை இல்ல அலுவலகங்கள் முன்பள்ளி பாடசாலைகள், தச்சுப் பாடசாலைகள், சனசமூக மாவட்ட செயலகத்திற்குரிய அரசின் வீடுகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்திடமுள்ள அனைத்து நடைமுறையல்லாத சொத்துக்கள் கிரயம் அல்லது மதிப்பிடப்பட்ட பெறுமதி நிதியல்லாத சொத்துக்களின் கீழ் உட்படுத்தப்பட வேண்டும். | இது தொடர்பாக பல சந்தர்ப்பங்களில் விலை மதிப்பீட்டு திணைக்களம் தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் அதன் போது அவர்கள் அரசின் சகல நிறுவனங்களும் சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்கு கையளித்துள்ளதால் தாமதம் இடம்பெறுவதாக குறிப்பிடப்பட்டிருந்தனர். பந்தியில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் இதுவரை கணக்கீடு செய்யப்பட்டதாக ஏற்றுக்கொள்வதுடன் மீண்டும் மதிப்பீட்டு திணைக்களம் தெரியப்படுத்தப்பட்டு 2020 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகின்றேன். |
| (ஏ) | திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் முற்பண பெறுவனவுகளின் கூட்டுத்தொகை ரூபா 83,824,923 மற்றும் முற்பண கொடுப்பனவுகளின் கூட்டுத்தொகை ரூபா 90,291,183 ஆக இருந்தது. நிதிச் செயலாற்றல் கூற்றில் அப்பெறுமதி முறையே ரூபா 120,826,535 மற்றும் ரூபா 148,179,984 முறையே ரூபா 37,001,612 மற்றும் ரூபா 57,888,801 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | வேறுபாடுகளுக்கு காரணங்கள் இனங்காணப்பட்டு சரியான கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட வேண்டும். | திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் முற்பண பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் 258011 கணக்கிற்கு மாத்திரம் உரியதாக இருப்பதுடன் மாவட்ட செயலகம் நிதிக்கூற்றுக்களை மாதாந்த நிதிப் பொழிப்புக்களில் முற்பணக் கணக்கில் வரும் அனைத்து எண்ணிக்கைகளையும் கூட்டுதல் இந்நிலைமை உருவாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏசீஏ 3 மாதிரியின் பிரகாரம் ரூபா 6,946,869 தொகை கட்டுநிதிக் கணக்கின் மீதி அத்திகதியில் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் நடைமுறைச் சொத்துக்களில் காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் கீழும் திறைசேரிக்கு செலுத்த வேண்டிய மீதியொன்றாக இருப்பதால் நடைமுறைப் பொறுப்பின் கீழும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதிக் கணக்கில் மீதி நிதி நிலைமை தொடர்பான கூற்று நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட வேண்டும். | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்கின் மீதியான ரூபா 6,949,869 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் நடைமுறைப் பொறுப்பின் கீழும் காண்பிக்க வேண்டுமென ஏற்றுக் கொள்வதுடன் தவறொன்றின் காரணமாக அது காண்பிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ஒ) | திறைசேரி பதிவேட்டின் பிரகாரம் ஏசீஏ 3 கட்டுநிதிக் கணக்கின் வரவு மற்றும் செலவு பெறுமதிகளின் பிரகாரம் தீர்வு செய்யப்படாத கட்டுநிதி மீதி ரூபா 6,946,869 ஆக இருந்த போதும் திரட்டிய பரீட்சை மீதியின் பிரகாரம் அது ரூபா 6,943,869 ஆக இருந்தமையால் ரூபா 3,000 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | வேறுபாடுகளுக்கு காரணங்கள் இனங்காணப்பட்டு சரியான கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட வேண்டும். | திறைசேரி பதிவேடுகளின் பிரகாரம் கட்டுநிதிக் கணக்கின் மொத்த வரவுப் பெறுமதி ரூபா 8,260,167,450 ஆக இருந்ததுடன் செலவுகளின் பெறுமதி ரூபா 8,253,220,581 ஆக இருந்தது. அது திணைக்கள பதிவேட்டின் பிரகாரம் மொத்த வரவு பெறுமதி ரூபா 8,260,167,450 ஆகவும் செலவுகளின் பெறுமதி ரூபா 8,253,220,581 ஆக இருந்தது. |

### 1.6.4 காசுப்பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திரட்டிய பரீட்சை மீதியின் பிரகாரம் வைப்புக்கள் பெறுவனவு மற்றும் கொடுப்பனவு முறையே ரூபா 1,137,394,677 மற்றும் ரூபா 759,300,911 ஆக இருந்த போதும், காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதிச் செயற்பாடுகளின் கீழ் வைப்புக்கள் பெறுவனவு மற்றும் கொடுப்பனவு முறையே ரூபா 1,137,418,505 மற்றும் ரூபா 759,375,136 என காண்பிக்கப்பட்டமையால் வைப்புக்கள் பெறுவனவு ரூபா 23.828 ஆலும் வைப்பு கொடுப்பனவுகள் ரூபா 74,225 ஆலும் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | வேறுபாடுகளுக்கு காரணம் இனங் காணப்பட்டு சரியாக கணக்குகளுக்கு சீராக்கம் செய்யப்பட வேண்டும். | காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதியாண்டில் உள்ளவாறான காசேட்டிற்கு கிடைத்த மற்றும் கொடுப்பனவு செய்த பெறுமதியே காண்பிக்கப்படுவதுடன் அதன் பிரகாரம் ஏனைய திணைக்கங்களுக்குரிய வைப்புக்கள் பெறுவனவு மற்றும் கொடுப்பனவு கருத்திற் கொள்ளப்பட்டமையால் இந்நிலைமை உருவாகியுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) மாவட்ட செயலகம் ஏனைய அமைச்சு மற்றும் திணைக்களம் காசு செலவிடப்பட்ட தேறிய செலவினம் திரட்டிய பரீட்சை மீதியின் பிரகாரம் ரூபா 6,510,917,896 ஆக இருந்த போதும், காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாடுகளுக்காக செலவிடலின் கீழ் அது ரூபா 6,602,134,826 என அதாவது ரூபா 91,216,930 ஆக கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | வேறுபாடுகளுக்கு காரணம் இனங் காணப்பட்டு சரியாக கணக்குகளுக்கு சீராக்கம் செய்யப்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்கள் திறைசேரியின் மாதாந்தம் சமர்ப்பிக்கப்படும் கணக்கு பொழிப்புக்களின் கூட்டுத்தொகை பெற்றுக் கொள்ளப்பட்டே தயாரிக்கப்படுவதுடன் NEW CIGAS நிகழ்ச்சி தொடர்பாக பொது திறைசேரியின் அரச கணக்குகள் திணைக்களத்தினால் அவ்வவ்போது புதிய சேர்க்கைகள் (Version) சமர்ப்பித்தலின் காரணமாக திரட்டிய பரீட்சை மீதிகளின் பெறுமதி திரட்டிய பெறுமதிகளைக் கூட்டும் போது வேறுபாடுகள் இடம் பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் சீராக்க கணக்குகளினதும் காசுப்பாய்ச்சல் கூற்றில் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களத் திற்காக செலவிடப்பட்ட செலவினம் ரூபா 6,602,134,826 ஆக இருந்தது. |

### 1.6.5 பதிவேடுகள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை

மாவட்ட செயலகத்தினால் கீழே காட்டப்பட்ட பதிவேடுகள் நாளதுவரையாக்கப்படாதிருந்ததாக தெரிவு கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சேதங்கள் தொடர்பான பதிவேடு | | |
| மாவட்ட செயலகத்தினால் நடாத்தப்பட்டிருந்த சேதங்கள் மற்றும் நட்டங்கள் பதிவேடுகள் பராமரிக்கப்பட்டிருந்த போதும் அது நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் அதன் கீழ் வரும் மாதிரியின் சேதங்கள் தொடர்பான பதிவு நாளது வரையாக்கப்பட பேணப்பட வேண்டும். | சேதங்கள் தொடர்பாக பதிவேடு நாளதுவரையாக பேணுவதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் |

(ஆ) வாகனங்கள் சம்பவப் பதிவேடு

| | | |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தினால் நிதிப்பிரமாணம் 1645(அ) பிரகாரம் 07 வாகனங்களின் சம்பவப் பதிவேடுகள் பராமரித்து நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் வாகனங்களின் சம்பவப் பதிவேடுகள் நாளது வரையாக்கப்பட வேண்டும் | கண்டி மாவட்ட செயலகத்திற்குரிய வாகனங்களின் அடிப்படை தகவல்கள், சேவை நடவடிக்கைகள், எரிபொருள் எரிவு பரிசோதனைஉட்பட அனைத்து தகவல்களும் உள்ளடக்கப்பட்டு சம்பவப் பதிவேட்டு புத்தகம் நாளதுவரையாக்க நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |

**1.6.6 கணக்காய்விற்கான சான்றுகளனிமை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| கண்டி மாவட்டத்தின் 3 பிரதேச செயலகங்களுக்கு சமூக அடிப்படை பசுமை சமுதாய நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்துவதற்காக 2019 ஆகஸ்ட் மாதம் குறைநிரப்பு மதிப்பீட்டு மூலம் ரூபா 4,050,000 ஆன நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் துமபனே பிரதேச செயலகம் மாத்திரம் இந்நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தது. உடுநுவர மற்றும் பன்வில பிரதேச செயலகங்களில் நிதிஏற்பாடு மீண்டும் கையளிக்கப்பட்டிருந்தன. இது தொடர்பான விபரங்கள் மாவட்ட செயலகத்திடம் காணப்படவில்லை. | கணக்காய்விற்கு தேவையான தகவல்களை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திறைசேரி செயலாளரின் 2019 நவம்பர் 20 ஆந் திகதிய BD/GPS155/09/01/HA-2019 ஆம் இலக்க கடிதம் மற்றும் உள்ளக மற்றும் சுதேச அலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சின் செயலாளரின் 2019 நவம்பர் 22 ஆந் திகதிய HAF-1/5/info'G கடிதத்தின் பிரகாரம் நிகழ்ச்சித் திட்டம் இடைநிறுத்தப்பட்டு உடுநுவர மற்றும் பன்வில பிரதேச செயலங்களின் நிநிஏற்பாடு முறையே 2019 திசெம்பர் 10 மற்றும் 18 ஆம் திகதிகளில் மீண்டும் கையேற்கப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

### 1.6.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

| அவதானிப்பு<br>சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| பொது நிர்வாக சுற்றறிக்கை<br>2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | மாவட்ட செயலகத்தின் 05 வாகனங்கள் தொடர்பாக சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சுட்டிக் காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் மாவட்ட செயலகத்தின் வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனையை விரைவில் மேற்கொள்ளுமாறும் சம்பவப் பதிவேடுகளில் பதிவு செய்து அது தொடர்பாக கணக்காய்விற்கு அறவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

### 1.6.8 மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்களின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | குண்டசாலை பிரதேச செயலகத்தின் ஓய்வூதிய இலக்கம் 01-239701 இன் கீழ் மரணித்த ஓய்வுபெற்ற ஒருவரின் ஓய்வூதியத்தை 2008 மே மாதம் முதல் 2012 சனவரி மாதம் வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 428,911 தொகை அவரின் மகளால் மோசடியாக பெற்றுக் | மோசடிக்குரிய பரிசோதனையை துரிதமாக மேற்கொண்டு பொறுப்பான தரப்பினர் தொடர்பாக உரிய பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணம் 104(4) இன் பரிசோதனையின் பிரகாரம் இரண்டு கிராத சேவைகளிடமிருந்து பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் மேலும் கிராம சேவையாளர் ஒருவர், ஓய்வூதிய அலுவலகர் |

| | | | |
|---|---|---|---|
| | கொள்ளப்பட்டிருந்தது. அது தொடர்பாக நிதிப் பிரமாணம் 104(4) அறிக்கையின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த தரப்பினரிமிருந்து அறவிட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. மேற்படி பரிந்துரையின் பிரகாரம் இதுவரை ஓய்வுபெற்ற இரண்டு கிராம சேவையாளர்களிடமிருந்து ரூபா 214,609 அறவிடப்பட்டிருந்த போதும், எஞ்சிய உத்தியோகத்தர்கள் அவர்களின் மேன்முறையீட்டை காரணமாக கொண்டு 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | ஒருவர் மற்றும் ஆவண உதவியாளர் ஒருவர் 2016 மே 02 ஆந் திகதிய மேன்முறையீடு சமர்ப்பித்துள்ளதால் அதற்குரிய அமைச்சின் தீர்மானம் கிடைக்கும் வரை நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லையென அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | மேற்படி ஓய்வூதிய வழக்குக்குரிய 2013 ஆகஸ்ட் 30 ஆந் திகதிய HAF-3-DICIP-02/004 ஆம் இலக்க பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளரின் கடிதத்தின் மேற்பரப்பு பரிந்துரையில் குறிப்பிட்ட ஒரு கிராம சேவையாளருக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் 2016 பெப்ரவரி 11 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட நிதிப்பிரமாணம் 104(4) பரிசோதனையில் அவர் நட்டத்திற்கு பொறுப்பாக தீர்மானிக்கப்பட்டு அவரின் ஓய்வூதியத்தில் இருந்து ரூபா 113.300 தொகை அறவிடப்பட்டிருந்தது. | ஆரம்ப புலனாய்வு பரிசோதனையின் பரிந்துரைகளை கருத்திற் கொண்டு நிதிப் பிரமாணத்தின் 104(4) இன் பிரகாரம் பரிசோதனை மேற்கொள்ளல். | ஆரம்ப அறிக்கையின் பிரகாரம் ஒரு கிராம சேவையாளரிடம் இருந்து ரூபா 42,641 தொகை அறவிடுவதற்கு நிர்மாணிக்கப்பட்டள்ளதுடன் நி.பி 104(4) பரிசோதனையின் பிரகாரம் மேற்குறித்த திட்டத்திற்காக ஆயுள் சான்றிதழ் வழங்கும் போது அது முறையாக பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைக்கு புறம்பாக செயற்படாமல் இருந்த காரணத்தினால் அவரின் சேவைக்காலம் மற்றும் எஞ்சிய ஆண்டுகளுக்கான தாக்கம் கருத்திற் கொள்ளப்பட்டு ரூபா 113,300 தொகையை அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

---

### 2.1 செலவின முகாமைத்துவம்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 258-1-1-0-2509 செலவின விடயத்திற்குரிய நிதி ஏற்பாடுகளில் 75 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்து. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் சரியான மதிப்பீடொன்று தயாரிக்கப்பட வேண்டும். | 258-1-1-0-2509 செலவின விடயத்திற்காக குறைநிரப்பு மதிப்பீடு 2019 ஆகஸ்ட் 09 ஆம் திகதியின் போதே ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் அதுவரை ஆண்டின் 08 மாத காலப்பகுதி கடந்து சென்றிருந்ததமையால் சமுதாய அடிப்படை பசுமை சமூகங்களை தாபித்தல் தொடர்பாக செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு முடியாதிருந்ததாக அறவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) 2 செலவின விடயங்களுக்குரிய ரூபா 3,738,827 ஆன நிதி ஏற்பாடு சேமிப்பிற்காக ஏற்றுக்கொள்ளக்4டிய காரணங்கள் சமர்ப்பிக்கப்பட வில்லை. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் சரியான மதிப்பீடொன்று தயாரிக்கப்பட வேண்டும். | 258-1-2-0-1506 செலவின விடயத்திலிருந்து பிரதேச செயலகங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் ஆதனக் கடன்களுக்காக அரசின் வட்டி பங்களிப்பு மேற்கொள்ளப்படுகின்றது. ஆதனக் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் அதிகளவில் இருப்பதால் இத்தொகை மதிப்பிடப்பட்ட போதும் வெவ்வேறு காரணங்களினால் கடன் விண்ணப்பங்களைவ ங்கிக்கு சமர்ப்பிக்காமையால் இச்சேமிப்பு ஏற்பட்டிருந்ததுடன் 258-1-1-0-2509 செலவின விடயத்தின் எதிர்பார்த்த |

| | | |
|---|---|---|
| | | சேமிப்பு ரூபா 2,874,500 ஆகும். இந்நிதி ஏற்பாடு 2019 ஆகஸ்ட் மாதத்தில் கிடைத்த குறைநிரப்பு நிதிஏற்பாடாக இருந்ததுடன் போதியளவு காலமொன்று இல்லாமையால் சேமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

**2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 258-1-2-0-1403 செலவின விடயத்திற்காக பிரதேச செயலகங்களில் சேகரிக்கப்பட்ட பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 400,174 ஆக இருந்த போதும் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றின் பதிவு (iii) இல் அது ரூபா 386,465 என ரூபா 13,709 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டும். | இது தவறுதலாக இடம்பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

**2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பல்வேறு செயற்பாடுகளுக்காக வேறு 28 அமைச்சுகள் மற்றும் 21 திணைக்களங்கள் மூலமாக வழங்கப்பட்ட மொத்தத் தொகை ரூபா 7,983,946,587 பெறுமதியான நிதி ஒதுக்கீட்டில், ஆண்டுக்குள் ரூபா 855,817,282 தொகை அதாவது 11 சதவீதம் மீண்டும் செலுத்தப்பட்டிருந்தது. அதில் ரூபா 801,198,778 தொகை மூலதன | நிதி ஏற்பாடுகளை முறையாகப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டில், கண்டி மாவட்டத்தில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக பல்வேறு அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து பெறப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் 92 சதவீதம் பயன்படுத்தப்பட்டு, 8 சதவீதம் எஞ்சியுள்ளதாக |

| | | | |
|---|---|---|---|
| | ஒதுக்கீடாக திரும்பச் செலுத்தப்பட்டிருந்தது. | | குறிப்பிடப்பட்டிருந்தது. இது உயர் மட்ட செயலாற்றலைக் கொண்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | இரண்டு அமைச்சுக் களிலிருந்து பெறப்பட்ட மொத்த மூலதன நிதி ஒதுக்கீடான ரூபா 56,556,000 முழுமையாக திரும்பப் பெறப்பட்டிருந்தது. | நிதி ஏற்பாடுகளை உரிய விதத்தில் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கல்வி அமைச்சினால் ரூபா 6,556,000 நிதி ஒதுக்கீடானது, கண்டி மஹாமாயா கல்லூரியின் பாதுகாப்பு மதிலை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்டிருந்ததோடு, நிதி ஒதுக்கீடு 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்றிருந்த போதிலும், 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் திட்ட திருத்தங் களுக்கான அனுமதி வழங்கப்பட்டமையால் பெறுகை மற்றும் நிர்மாணப் பணிகளை 20 தினங்களுக்குள் பூர்த்தி செய்ய முடியாத காரணத்தால் நிதி ஒதுக்கீட்டை திரும்பச் செலுத்தியதாக அறியத் தரப்பட்டுள்ளது.<br><br>தங்கொல்ல விளையாட்டு மைதானம் மற்றும் மேடையை அபிவிருத்தி செய்வதற்காக மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சினால் ரூபா 50,000,000 தொகை நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்ததோடு, பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கான கால அளவு போதாமையால் நிதி ஒதுக்கீடு திரும்பச் செலுத்தப்பட்டதாக அறியத் தரப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 இல சனாதிபதி செயலகம் உள்ளிட்ட 08 அமைச்சுகளால் செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்களுக்கான, தீர்க்கப்பட வேண்டிய விலைப் பட்டியல்களின் கூட்டுத் தொகை ரூபா 568,037,770 பெறுமதியாக இருந்ததோடு, இந்த விலைப்பட்டியல்களில் ரூபா 458,702,045 பெறுமதியான விலைப்பட்டியல்கள் 2020 மே மாதம் 18 ஆம் திகதி வரையும் தீர்க்கப்பட்டிருக்க வில்லை. | வேலைகள் பூரணமாகியுள்ள செயற்திட்டங்களின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் அறிக்கைகளைப் பெற்று உடனடியாக கொடுப்பனவுகளைச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | மாவட்ட செயலகத்தினால் மாவட்டத்தினுள் செயற்படுத்தப்பட்ட பல்வேறு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக 2019 ஆம் ஆண்டின் இறுதியில் அண்ணளவாக ரூபா 568 மில்லியன் பெறுமதியான விலைப் பட்டியல்களைத் தீர்க்க இயலாமல் இருப்பதை ஏற்றுக் கொள்கிறேன். காரணம், அதற்கு போதியளவான கட்டுநிதி திறைசேரியிலிருந்து கிடைக்காமை ஆகும். 2020 ஆம் ஆண்டின் 05 மாதங்கள் கடந்துள்ள போதிலும், கையிலுள்ள அனைத்து விலைப்பட்டியல்களையும் செலுத்தித் தீர்த்து முடிப்பதற்கான போதியளவான தொகை இதுவரையில் கிடைக்கப் பெறவில்லை என்று அறியத் தரப்பட்டுள்ளது. |

(ஈ) **சனாதிபதி செயலகம்**

| | | |
|---|---|---|
| சனாதிபதி செயலகத்தினால் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகவும், வறுமையை வெற்றி கொள்வதற்கான திறமையை அவர்களிடமே ஒப்படைத்து ஆயிரக்கணக்கான ஏனைய மக்களோடு கை கோர்த்து சுய சக்தியால் எழுந்து நிற்கும் திறமையை வழங்கும் நோக்கத்தில் கிராம சேவகர் பிரிவு மட்டத்தில் கிராம சக்தி மக்கள் இயக்கம் செயற்படுத்தப்பட்டிருந்தது. அதன் முதற்கட்டத்தில் பதிவு செய்த 62 சங்கங்களுக்காக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ஒரு ஆண்டுக்கு ஒரு மில்லியன் ரூபா என்றும், இரண்டாம் கட்டத்தில் 181 சங்கங்களுக்கான ஆரம்ப வைப்பு உள்ளிட்ட ரூபா 410,000 என்றும் மொத்தமாக ரூபா 193,800,000 நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும், | செயற்திட்டத்தால் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளைப் பூர்த்தி செய்வதற்கான அரசியலமைப்பின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | கிராம சக்தி முதலாம் கட்டத்துக்குரிய இரண்டாம் தவணை 2019 மே மாதம் 24 ஆம் திகதியிட்ட கடிதத்தால் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், 2019 ஜுன் 04 ஆம் திகதியிட்ட கடிதத்தால் பிரதேச செயலக அலுவலகத்தினால் விடுவிக்குமாறு அறியத் தரப்பட்டிருந்தது. எனினும் முற்பணம் வழங்கப்படாமையால் 04 பிரதேச செயலக அலுவலகங்கள் மற்றும் 08 சங்கங்களால் 08 மில்லியன் பெறுமதியான பணத் தொகை வங்கிக் கணக்கில் வைப்பிலிட இயலாமல் போனதாகவும், இரண்டாம் கட்டத்தின் முதலாம் தவணைக்கான நிதி ஒதுக்கீடு 2019 ஆம் ஆண்டு பெப்ரவரி |

(i) பிரதேச செயலகப் பிரிவுகள் 4 இல் முதலாம் கட்டத்தில் 9 சங்கங்களுக்காக 2019 ஆண்டிற்காக ரூபா 8,000,000 மற்றும் இரண்டாம் கட்டத்தில் பிரதேச செயலகப் பிரிவுகள் 12 இல் 102 சங்கங்களுக்காக ரூபா 40,400,000 ஆகியவை 2020 ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி வரையும் சங்கக் கணக்குகளில் வரவு வைக்கப் பட்டிருக்கவில்லை.

(ii) அந்தத் தொகையில் முதலாம் கட்டத்தில் சங்கத்துக்காக வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் பயன்பாடுகள் வாழ்வாதாரம், திறன் மற்றும் உள்கட்டமைப்பு அடிப்படை வசதிகள் ஆகியவற்றுக்காக முறையே 42.7 சதவீதம், 23.6 சதவீதம் மற்றும் 56.6 சதவீதம் ஆக இருந்ததால் மொத்த பயன்பாடு 41.5 சதவீதமாக இருந்ததோடு, இரண்டாம் கட்டத்தில் சங்கத்துக்காக வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் பயன்பாடுகள் வாழ்வாதாரம் மற்றும் திறன்கள் ஆகியவற்றுக்காக முறையே 6 சதவீதம் மற்றும் 9 சதவீதம் ஆக இருந்ததால் மொத்த பயன்பாடு அண்ணளவாக 7 சதவீதமாகக் காணப்பட்டது.

மாதம் 27 ஆம் திகதி வழங்கப்பட்ட போதிலும், 12 பிரதேச செயலக அலுவலகங்களின் 101 சங்கங்களைப் பதிவு செய்து முடித்திருக்காமையால் ரூபா 40,400,000 பணத் தொகை சங்கத்திடம் விடுவிக்க முன்பணம் இல்லாத காரணத்தால் சிக்கல்கள் ஏற்பட்டதாக அறியத் தரப்பட்டுள்ளது.

**(உ)** கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சு

(i) தொழில் முனைவோரை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தில் செயற்படுத்தப்பட்ட நங்வமு லங்கா (இலங்கையைக்

செயற்திட்டத்தின் நோக்கங்கள் பூர்த்தி செய்யப்படும் விதத்தில் தாமதமின்றி செயற்படுத்தப்படல்

கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களை தொழில்நுட்ப அபிவிருத்தி வாரியத்தின் மாவட்ட உதவி இயக்குனரிடம்

| | | | |
|---|---|---|---|
| | கட்டியெழுப்புவோம்) நிகழ்ச்சித் திட்டத்துக்காக ரூபா 24,525,013 தொகையைச் செலவழித்து உணவுத் தயாரிப்பு விற்பனை உபகரணங்கள், ஆடைத் தயாரிப்பு உபகரணங்கள், மின் சாதனங்கள், விவசாய நடவடிக்கைகல் மற்றும் தச்சு வேலைக்குத் தேவையான உபகரணங்கள், தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் பெண்களுக்கான தையல் இயந்திரங்கள் போன்றவை 2019 ஆம் ஆண்டில் நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 2020 பெப்ரவரி மாதம் வரை கூட பகிர்ந்தளிக்கப்படாமல் மாவட்ட செயலக காரியாலயத்தினுள் ஆங்காங்கே சில இடங்களில் வைக்கப்பட்டிருந்த இந்த உபகரணங்களை கணக்காய்வு விசாரணைக்குப் பிறகு 2020 மார்ச்சு மாதத்தில் தொழில்நுட்ப அபிவிருத்தி சபையின் மாவட்ட உதவி முகாமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. | வேண்டும். | ஒப்படைக்குமாறு அமைச்சின் செயலாளரால் 2020 பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதியிட்ட கடிதத்தின் மூலமாக அறியத் தரப்பட்டுள்ள போதிலும் களஞ்சியசாலை வசதி மற்றும் போக்குவரத்து வசதியைத் திட்டமிட்டு 2020 மார்ச் மாதம் 14, 16 மற்றும் 17 ஆம் திகதிகளில் பல்லேகலை சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் களஞ்சியசாலைக்குக் கொண்டு சென்று ஒப்படைக்க நடவடிக்கை எடுத்ததாக அறியத் தருகிறேன். |
| (ii) | கொள்வனவு செய்யப்பட்டிருந்த உபகரணங்களை களஞ்சியசாலையில் வைத்திருப்பதனால் அந்த உபகரணங்களுக்குரிய உத்தரவாத காலம் கடந்து செல்லும் அபாயம் காணப்படுவதோடு, கொள்வனவு செய்யப்பட்ட பிறகு சேவை வழங்கும் இலாபகரமான | பொருட்களைக் கொள்வனவு செய்வதன் மூலம் கிடைக்கப் பெறும் இலாபங்களைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள நிலைமையை அமைச்சுக்கு வாய்வழியாக அறியத் தந்த போதிலும், உபகரணங்களை முறையாக ஒப்படைப்பது தொடர்பாக அறிவுரைகள் கிடைக்கப் பெறவில்லை என்பதை இதற்குக் காரணமாகக் குறிப்பிடுவதோடு, பொறுப்புகள் அமைச்சிடம் |

| | | | |
|---|---|---|---|
| | நிலைமையையும் அடைய கொள்ள முடியாமல் இருந்தது. | | காணப்படுவதாக அறியத் தரப்பட்டுள்ளது. |
| (iii) | 2019 ஒக்டோபர் மாதம் 22 ஆம் திகதிய EC/EDR/PRE/ INQ/2019 ஆம் இலக்க நங்வமு லங்கா (இலங்கையைக் கட்டியெழுப்புவோம்) நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக வெளியிடப்பட்ட தேர்தல் ஆணையாளர் ஆணைக்குழுவின் மேலதிக தேர்தல் ஆணையாளரின் (நீதி மற்றும் விசாரணை) கடிதத்துக்கு இணங்காமல் ரூபா 18,140,573 தொகை பெறுமதியான இயந்திர உபகரணங்கள் 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 இல முன்பாக கொள்வனவு செய்யப்பட்டிருந்தது | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | தேர்தல் ஆணையாளர் சபை அமைச்சின் செயலாளரை அழைத்திருக்கும் 2019 ஒக்டோபர் மாதத்தின் 22 ஆம் திகதியிட்ட கடிதத்தை மாவட்ட செயலாளர் காரியாலயத்திடம் தொடர்புபடுத்தாத காரணத்தால் ரூபா 18,140,573 இற்கான கொள்வனவு 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 இல முன்பாக செய்யப்பட்டது என்பது அறியத் தரப்பட்டுள்ளது. |

**(ஊ) ஓய்வூதியத் திணைக்களம்**

| | | |
|---|---|---|
| தும்பனை பிரதேச செயலகப் பிரிவின் விதவை 21-25006 ஆம் இலக்க ஓய்வூதியதாரரின் 1993 நவம்பர் 23 ஆம் திகதியிலிருந்து பேணப்பட்டு வரும் தற்காலிக கோப்பில் ஓய்வூதியம் வழங்கப்பட்டிருந்ததோடு, 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ஒரு நிலையான கோப்பு பேணப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை ஒழுங்காக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அடையாள அட்டையைத் தயாரிப்பதற்கு உரிய கிராம சேவகர் அறிக்கையைக் கோரியிருந்த போதிலும் அவர் சுகவீனமுற்றிருந்த காரணத்தால் தாமதம் நேர்ந்துள்ளது. இப்போது அடையாள அட்டையைத் தயார் செய்து கோப்பு ஓய்வூதியத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறியத் தரப்பட்டுள்ளது. |

**(எ) மகளிர் பணியகம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | இலங்கை மகளிர் பணியகத்தினால் செயற்படுத்தப்படும் சுழற்சிக் கடன் திட்டத்தின் கீழ் கடனைப் பெற்றுக் கொண்ட பயனாளிகளிடமிருந்து | உத்தியோகத்தர்கள் தமது கடமையை ஒழுங்காக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பன்வில, தொளுவ மற்றும் பாத்ததும்பற ஆகிய பிரதேச செயலக காரியாலயங்களில் நிலுவையிலுள்ள கடன்கள் பூரணப்படுத்தப்பட்டுள்ளதோடு, உடபலாத பிரதேச செயலக |

| | | | |
|---|---|---|---|
| | உடபலாத, ஹரிஸ்பத்துவ மற்றும் பாதஹேவாஹெட்ட ஆகிய பிரதேச செயலாளர் காரியாலயங்களில் 2020 ஜூன் மாதம் 30 ஆந் திகதி வரையில் 06 கடன் மீதி களுக்குரிய ரூபா. 24,015 தொகை 01 ஆண்டுக்கும் 10 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட கால பகுதிக்குள் அறவிட நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | | காரியாலயத்தில் ஒரு நிலுவைத் தொகையும், ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலக காரியாலயத்தில் 02 நிலுவைத் தொகைகளும், பாத்தஹேவாஹெட்ட பிரதேச செயலக காரியாலயத்தில் 03 நிலுவைத் தொகைகளும் இன்னும் அறவிடப்பட வேண்டியுள்ளன என அறியத் தரப்பட்டுள்ளது. |
| (ii) | கிராமியப் பெண்களின் பொருளாதார நிலைமையை உயர்த்துவதன் மூலம் அவர்களது சேமிப்புத் திறனை அதிகரிக்கச் செய்து அன்றாட கொடுக்கல் வாங்கல்களை முறையாக செய்யத் தூண்டுதல் மற்றும் அதிக வட்டிக்குக் கடன் பெறுவதைத் தவிர்த்தல் ஆகிய எதிர்பார்ப்பு இலக்குகளோடு மகளிர் பணியகத்தால் சுழற்சிக் கடன் திட்டம் செயற்படுத்தப்பட்ட போதிலும், 2019 ஆம் ஆண்டில் மெததும்பர, ஹதரலியத்த மற்றும் தெல்தொட்ட பிரதேச செயலாளர் காரியாலயங்களில் இந்த நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்கவில் லை. | கிராம மட்டத்தில் பெண்களை பொருளாதார ரீதியில் மேம்படுத்துவதற்காக அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களிலும் சுழற்சி கடன் திட்டம் செயற்படுத்தப்படல் வேண்டும். | சுழற்சி கடன் திட்டத்துக்காக பணம் கோரி இலங்கை மகளிர் பணியகத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை அதற்கான நிதி ஒதுக்கீடு வழங்கப்படவில்லை என்று பிரதேச செயலாளர்கள் அறியத் தந்திருக்கிறார்கள். |
| (iii) | 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12 திகதியின் MWGA/WB/ கி.கா.செ / 2017 ஆம் இலக்க இலங்கை மகளிர் பணியகத்தின் பணிப்பாளரின் கடிதத்தின் பிரகாரம் கிராம சேவகர் பிரிவு அடங்கும் விதமாக மகளிர் செயற்பாட்டு குழுக்களை உருவாக்கி பதிவு செய்வதற்கு நடவடிக்கை | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | சங்கங்களில் கணக்குகளைத் தொடங்கும் நடவடிக்கைகளில் சங்க மட்டத்தில் தாமதங்கள் காணப்படுவதாகவும், பதிவு ஆவணங்களில் குறைபாடுகள் இருப்பதன் காரணமாக பதிவுகள் தாமதமாகியிருப்பதாகவும், பதிவுக் கட்டணம் ரூபா 1,050 ஆகக் காணப்படுவதன் காரணத்தாலும் பதிவுகள் |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்பட வேண்டும் எனினும், உரிய பரிசோதனையில் பாத்தஹேவாஹெட்ட, உடதும்புர, உடுநுவர, ஹரிஸ்பத்துவ, அக்குறணை, மினிபே மற்றும் ஹதரலியத்த பிரதேச செயலகக் காரியாலயங்களில் கிராம சேவகர் பிரிவுகள் 684 இல் மகளிர் செயற்பாட்டு குழுக்கள் 44 பதிவு செய்யப்பட்டிருக்க வில்லை. | | தாமதமாகியிருப்பதாக பிரதேச செயலாளர்கள் அறியத் தந்துள்ளார்கள். |
| (ஏ) | நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் | | |
| | கிராம சேவகர் பிரிவுக்குள் அடங்கும் விதமாக சிறுவர் சமூகங்களை அமைத்து நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தில் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் எனினும், 20 பிரதேச செயலகங்களில் 1187கிராம சேவகர் பிரிவுகளில் 1002 பிரிவுகள் மாத்திரம் சிறுவர் சமூகங்களாக பதிவு செய்யப்பட்டிருந்தன. | மாவட்ட ஒன்றுகூடல்கள் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பதிவு செய்யப்படாத சிறுவர் சமூகங்களைப் பதிவு செய்யத் தேவையான விண்ணப்பங்களைப் பெற்று உடனடியாக சிறுவர் சமூகங்களை அமைப்பதற்கு நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுப்பதாக பிரதேச செயலாளர்கள் அறியத் தந்துள்ளார்கள். |
| (ஒ) | முதியோர்களுக்கான தேசிய செயலகம் | | |
| (i) | 2018 ஒக்டோபர் 15 ஆம் திகதிய NSE/EL/01/2018 ஆம் இலக்க சமூக நலன்புரி மற்றும் ஆரம்ப கைத்தொழில் அமைச்சின் சுற்றறிக்கையின் 2.1.5 ஆம் பந்தியின் பிரகாரம் முதியோர் கொடுப்பனவை 03 மாதங்கள் தொடர்ச்சியாக பெற்றுக் கொள்ளவில்லை என ஆவணங்களுக்கு இணங்க நிரூபிக்கப்பட்டதன் பிறகு அதற்கு சம்பந்தமான எழுதுனரினால் முதியோர் | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 03 மாதங்களில் பெற்றுக் கொள்ளப்படாத முதியோர் கொடுப்பனவு கைவிடப்பட்டிருந்த போதிலும், 2020 ஆம் ஆண்டில் உதவி பிரதேச செயலாளரின் சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்ததால் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் முந்தைய ஆண்டுகளில் கொடுப்பனவு கைவிடப்பட்டமை தொடர்பாகவும் ஆராய்ந்து பார்த்து அறிக்கையிடுமாறு |

| | | | |
|---|---|---|---|
| | கொடுப்பனவைப் பெறுபவரை ஆவணங்களிலிருந்து நீக்குவதற்கு முன்பாக பிரதேச செயற்குழு உறுப்பினர்களின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். எனினும், பிரதேச செயற்குழு உறுப்பினர்களின் அனுமதியை பெறாமல் ஹதரலியத்த மற்றும் தொழுவ ஆகிய 2 பிரதேச செயலாளர் காரியாலயங்களில் முதியோர் கொடுப்பனவைப் பெறுவோர் முறையே 03 பேரினதும், 07 பேரினதும் பெயர்கள் நீக்கப்பட்டிருந்தன. | | அறிவுறுத்தல்களை வழங்கியதாகவும் ஹதரலியத்த பிரதேச செயலாளர் அறிக்கை தந்துள்ளார். முதியோர் கொடுப்பனவை 03 மாதங்கள் தொடர்ச்சியாக பெற்றுக் கொள்ளாத முதியோர் கொடுப்பனவைப் பெறுபவர்களை ஆவணங்களிலிருந்து நீக்கியமை தொடர்பாக சுற்றறிக்கையின் பிரகாரம் பிரதேச செயற்குழு உறுப்பினர்களின் தீர்மானத்தின் பிறகே செயற்பட்டதாக தொழுவ பிரதேச செயலாளர் அறியத் தந்துள்ளார். |
| (ii) | மேலே குறிப்பிடப்பட்டுள்ள சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்தியின் விதி முறைகளுக்கு மாற்றமாக நலனாலிகளைத் தேர்ந்தெடுக்கும் நடவடிக்கை பிராந்திய உறுப்பினர்கள் இல்லாமல், தும்பனை பிரதேச செயலகத்தின் உரிய உத்தியோகத்தர்களால் நலனாலிகளைத் தேர்ந்தெடுத்தல் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | தகுதி வாய்ந்தவர்களைத் தேர்ந்தெடுப்பது பிரதேச செயற்குழு உறுப்பினர்களின் கலந்துரையாடலின் மூலம் நடைபெற்ற போதிலும் செயற்குழு அறிக்கையைத் தயாரித்தல் இதுவரை நடைபெறவில்லை எனினும் வருங்காலத்தில் செயற்குழு அறிக்கையைத் தயாரிக்க நடவடிக்கை எடுப்பதாக தும்பனை பிரதேச செயலாளர் அறியத் தந்துள்ளார். |
| (ஓ) | மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு | | |
| | கர்ப்ப காலத்தில் உரிய காலத்துக்கு ஏற்ற உரிய போஷாக்குகளை வழங்குதல் மற்றும் எடை குறைவான குழந்தைப் பிறப்பை இலங்கையிலிருந்து இல்லாதொழித்தல் ஆகிய நோக்கங்களை முன்னிட்டு போஷாக்குப் பொதி நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்பட்ட போதிலும், மெததும்பர, தும்பனை, பாத்தஹேவாஹெட்ட மற்றும் | நிதி ஒதுக்கீடுகள் மூலமாக உச்ச பயனைப் பெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | தாய்மார்கள் குழந்தைப் பேற்றுக்காக வேறு பகுதிகளுக்குச் செல்லல், கவனயீனம், தாய்மார்கள் போஷாக்குப் பொதிக்கான பற்றுச்சீட்டை காணாமலாக்கிக் கொள்ளுதல், கருச்சிதைவு, காலம் கடந்த பிறகு வருதல் போன்ற காரணங்களால் போஷாக்குப் பொதியைப் பெற்றுக் கொள்வதில்லை |

| | | |
|---|---|---|
| தொளுவ பிரதேச செயலகங்களில் 2019 திசெம்பர் 31 இல 893 சந்தர்ப்பங்களில் ரூபா 1,786,000 பெறுமதியான போஷாக்குப் பொதிகள் பெற்றுக் கொள்ளப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டிருந்தன. | | என்று பிரதேச செயலாளர்கள் வெளிப்படையாக அறியத் தந்துள்ளதோடு அனைத்துத் தாய்மார்களுக்கும் வியாபார நிலையங்களைப் பட்டியலிட்டு கடிதம் அனுப்புதல், மருத்துவமனை மட்டத்தில் அறியத் தருதல் ஆகியவை நடைபெற்றுள்ளன. போஷாக்குப் பொதி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பொருட்களை வினியோகிக்கும் நடவடிக்கை ஒவ்வொரு மாதத்திலும் 20 ஆம் திகதியில் இருந்து 30 ஆம் திகதி வரை நடைபெறுதல், வியாபார நிலையத்தின் முன்னால் விளம்பரங்களைக் காட்சிப்படுத்தல், கிராம சேவகரின் மூலம் தகுதியானவர்களுக்கு அறியத் தருதல் போன்ற வழிமுறைகள் சிலவற்றின் மூலமாக தாய்மாருக்கு அறியத் தருதல் நடைபெறுவதாக அறியத் தரப்பட்டுள்ளது. |

(ஔ) விவசாயத் திணைக்களம்

| | | |
|---|---|---|
| (i) 2018/2019 பெரும்போகத்திற்காக நெல் கொள்வனவு செய்யும் நடவடிக்கைக்காக விவசாய அமைச்சினால் கண்டி மாவட்ட செயலாளர் காரியாலயத்திற்கு வழங்கப்பட்டிருந்த நிதி ஒதுக்கீட்டில் மீளாய்வாண்டின் வரையறுக்கப்பட்ட கண்டி மாவட்ட அரிசி உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்திற்கு 04 சந்தர்ப்பங்களில் ரூபா 10 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. அந்தத் தொகையில் இரண்டு சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 5 | ஒப்பந்தப் பிரகாரம் கடன் தொகையை செலுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஒப்பந்தத்தின் வரைவு சட்ட மா அதிபர் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்ட வடிவமைப்பு என்பதால் அதன் பாகங்களை மாற்றக் கூடாது. இந்தத் தொகையை 2019 திசெம்பர் 31 இல செலுத்தி முடிக்குமாறு 2019 திசெம்பர் 18 ஆம் திகதியிட்ட கடிதம் மூலமாக நினைவூட்டப்பட்டுள்ளது. எனினும், அவர்கள் ஒப்பந்தப் பிரகாரம் உரிய தொகையைச் செலுத்தாததால் 2020 ஜனவரி 20 ஆம் திகதி ஒரு கலந்துரையாடலை நிகழ்த்தி அவர்களிடம் இந்தத் தொகையை |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் ஒரு மாதம் தாமதமாக செலுத்தப்பட்டிருந்ததோடு 2019 ஆகஸ்ட் மாதம் 05 மற்றும் ஒக்டோபர் 31 ஆகிய தினங்களில் செலுத்தப்பட வேண்டிய முறையே ரூபா 4 மில்லியன் மற்றும் ரூபா 1 மில்லியன் பணத் தொகையும் 2020 ஜூன் 30 ஆம் திகதி வரை தாமதக் காலம் முறையே 04 மாதங்கள் மற்றும் 02 மாதங்கள் கழிந்த நிலையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | செலுத்தாதிருந்தால் ஏற்படக் கூடிய சிக்கல்களைச் சுட்டிக் காட்டி உடனடியாகச் செலுத்த வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறியத் தரப்பட்டுள்ளது. பணம் செலுத்தாமல் தவிர்ப்பது தொடர்பாக 2020 ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி கண்டி விஷேட குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறியத் தரப்பட்டுள்ளது. |
| (ii) | 2019 மே மாதம் 15 ஆம் திகதி கண்டி மாவட்ட உதவி கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் மேற்கூறப்பட்ட கூட்டுறவு சங்கத்தின் கடன் தொகையை செலுத்த இயலாமை குறித்து மாவட்ட செயலாளருக்கு அறியத் தரப்பட்டுள்ள நிலையில் மற்றும் மேற்கூறப்பட்ட கடன் தொகையைச் செலுத்தத் தாமதமாகியுள்ள நிலையில் மீண்டும் ரூபா 01 மில்லியன் கடன் தொகை கூட்டுறவு சங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ளமை சர்ச்சைக்குரியதாக இருந்ததுடன் ஒப்பந்தத்துக்கு தாமதக் கட்டணம் அறவிடுவது குறித்த பிரிவும் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | கடனைச் செலுத்தும் இயலுமை மற்றும் கடந்த கால கடன் செலுத்துதல் தொடர்பான தகவல்களை உறுதிப்படுத்திய பிறகே கடன் வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | 2019 மே மாதம் 15 ஆம் திகதி முன்வைக்கப்பட்ட உரிய அறிக்கையில் அவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2019 ஆகஸ்ட் 05 ஆம் திகதி வழங்கப்பட்ட 4 மில்லியன் ரூபா பணத் தொகைக்காக 2019 ஜூலை 24 இலரிய கடிதத்தின் மூலமும் 2019 ஒக்டோபர் 31 ஆம் திகதி வழங்கப்பட்ட 1 மில்லியன் ரூபா பணத் தொகைக்காக 2019 செப்டம்பர் 06 திகதிய கடிதத்தின் மூலமும் உதவி கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக அறியத் தரப்பட்டுள்ளது. |

## 2.4 முற்பணங்களை வழங்குதலும் தீர்வுசெய்தலும்

-----------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) அரச உத்தியோகத்தர்களின் முற்பண இணக்கக்கூற்றின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிட வேண்டியுள்ள நிலுவைக் கடன் மீதி ரூபா 680,024 ஆக இருந்தது. அதில் பிரதேச செயலகமொன்றில் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 178,250 கூட்டுத்தொகையான கடன் மீதியும் சேவையை விட்டுச் சென்ற இரண்டு பிரதேச செயலகங்களின் இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 170,276 கூட்டுத்தொகையான கடன் மீதியும் 2020 யூன் 30 ஆந் திகதி வரை 6 ஆண்டுகளுக்கும் 16 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதும் அறவீடுகள் நிலுவையாக காணப்பட்டன. | வழங்கப்பட்ட கடன்தொகையை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 02 பிரதேச செயலகங்களில் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து 2019.12.31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 208,230 என ஏற்றுக்கொள்கின்றேன். அக்கடன் மீதிகள் தற்போதய நிலைமையின் பிரகாரம் ரூபா 24,440 ஆன கடன் மீதி முழுமையாக 2020 யூன் 03 ஆந் திகதி அறவிடப்பட்டுள்ளதுடன் ரூபா 47,170 ஆன மீதிகளில் ரூபா ரூபா 5,540.00 தொகை அறவிடப்பட்டுள்ளது. ரூபா 136,620 ஆன கடன் மீதியை உடைய உத்தியோகத்தருக்கு எதிராக இடம்பெறும் ஒழுக்காற்று பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஏனைய இரண்டு உத்தியோகத்தர்களின் ஒழுக்காற்று பரிசோதனை செயற்பாடுகளை துரிதமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது, நிகழ்ச்சிசித்திட்டங்களை நடாத்தும் சகல உத்தியோகத்தர்களும் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் முற்பணத்தை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கட்டாயமாக ஆலோசனை வழங்கியிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 3.5 பிரிவின் பிரகாரம் கடன் வழங்கும் போது உத்தியோகத்தரின் சம்பளத்தில் மாதமொன்றின் கழிப்பனவுகளின் எல்லை 40 சதவீதத்தை மிகைக்க கூடாது. எனினும் அந்த எல்லையை மிகைத்து 06 சந்தர்ப்பங்களின் போது ரூபா 283,782 ஆன கடன் மீதி வழங்கப்பட்டிருந்தது, | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் 40 சதவீத எல்லை மிகைக்காத வகையில் கடன் வழங்கப்பட வேண்டும். | சம்பளத்தில் 40 சதவீதம் கணக்கிடும் போது தவறொன்று இடம் பெற்றுள்ளதாக ஏற்றுக் கொள்வதுடன் அவ்வாறான தவறுகள் இடம்பெறாத வகையில் எதிர்ாலத்தில் நடவடிக்கை எடுக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசணை வழங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 2.5 வைப்பு மீதிகள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| கம்பெரலிய வேகமான கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2018 இன் கீழ் மினிகமுவ மஹா வித்தியாலயத்தின் விளையாட்டரங்கு அபிவிருத்தி செயற்திட்டத்தை அமுல்படுத்தும் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு 2018 நவம்பர் 14 ஆந் திகதி தும்பனே பிரதேச செயலகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் அதில் குறைபாடுகளை பூர்த்தி செய்யாமை காரணமாக ரூபா 67,901 ஆன நிறுத்தவைத்தல் தொகை ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | அபிவிருத்தி திட்டங்களின் நிறைவேற்ற வேண்டிய குறைபாடுகள் முடியுமான வரை விரைவில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு விசாரணையின் பின்னர் செயற்திட்டத்தின் குறைபாடுகளின் ஒரு பகுதி புனரமைப்பு செய்யப்பட்டதுடன் கொவிட் 19 அனர்த்த நிலைமை காரணமாக வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு முடியாமல் இருந்தது. இது தொடர்பாக குறித்த வித்தியாலயத்திற்கு நினைவூட்டல் அனுப்பகைவ்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட குறைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சுற்றறிக்கையின் 3(அ) பந்தியின் பிரகாரம் ஒழுங்கமைப்பு கட்டமைப்பு நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் தற்போது சேவையிலுள்ள பதவியணியினர் தொடர்பான தகவல்கள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டும். | வருடாந்த வரைவு செயல் நடவடிக்கைத் திட்டத்திற்காக நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் தற்போது சேவையிலுள்ள பதவியணியினர் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்படாமல் இருந்த போதும் தற்போது தயாரிக்கப்பட்டுள்ள வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அத்தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டுநிதி தேவைப்பாட்டு செயல்நடவடிக்கைத் திட்டம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டும். | வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டுநிதி தேவைப்பாட்டின் பிரகாரம் வருடாந்த கட்டுநிதி பொது திறைசேரியின் செயற்பாட்டுப் பணிப்பாளர் நாயகத்திற்கு வேறாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் வருடாந்த வரைவு செயற்பாட்டு திட்டத்திற்கு உள்ளடக்கப்படாமல் இருந்ததுடன் தற்போது தயாரிக்கப்பட்டுள்ள செயற்பாட்டுத் திட்டத்திற்கு உட்படுத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | திட்டமிடப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காகன வருடாந்த பெறுகை செயற்திட்டம் மற்றும் உள்ளக கணக்காய்வுத் திட்டம் வெவ்வேறாக தயாரிக்கப்பட்டிருந்த போதும் சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டும். | வருடாந்த பெறுகை செயற்திட்டம் மற்றும் உள்ளக கணக்காய்வுத் திட்டம் என்பன சுட்டிக்காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் தற்போது தயாரிக்கப்பட்டு செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தத. |

## 3.2 எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டங்களை அமையாமை

---

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் தொழுவ இல்லகொல்ல கனிஷ்ட வித்தியாலயத்தின் ஆசிரியர்களுக்காக சுகாதார வசதிகளைச் செய்து கொடுக்க வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினால் ரூபா 194,000 இற்கு மேற்பட்ட தொகையை செலவழித்து கழிவறை ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், நிர்மாணிக்கப் பட்டிருந்த கழிவறையின் கொங்கிரீட் தட்டின் கீழ்ப்பாகத்தில் சாந்து பூசப்படாமல் இருந்ததுடன் கழிப்பறைக்கான சுற்றுத் திண்ணையும் நிர்மாணிக்கப் பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு மற்றும் உரிய விவரக் குறிப்புகளுக்கு ஏற்ப செயற்திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும். | கழிவறையை திருத்தம் செய்தல் மற்றும் சுற்றுத் விராந்தை அமைத்தல் ஆகியவற்றை அனுமதி அளிக்கப்பட்டிருக்கும் பணப் பெறுமதிக்குள் செய்ய இயலாதுள்ளதோடு, இவற்றுக்காக மதிப்பீடும் செய்யப்பட்டிருக்கவில்லை என்றும், தற்போது கழிவறை உபயோகப்படுத்தப்படுவதாகவும் அறியத் தரப்பட்டுள்ளது. |
| (ஆ) | கம்பெரலிய துரித அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தொழுவ இல்லகொல்ல கனிஷ்ட வித்தியாலய மாணவர்களுக்கான சுகாதாரமான கழிவறைத் தொகுதியொன்று பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினால் ரூபா 485,000 செலவழித்து நிர்மாணிக்கப்பட்டுள்ளது. | மதிப்பீடு மற்றும் உரிய விவரக் குறிப்புகளுக்கு ஏற்ப செயற்திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும். | அங்கீரிக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டை விடவும் அதிகம் செலவாகுவதால் இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் பணிகளைப் பூர்த்தி செய்ய முடியவில்லை என்பதோடு, செய்து முடிக்காத பணிகளை பாடசாலை மூலமாக பூரணப்படுத்துவதாகவும், கழிவறை தற்போது |

| | | |
|---|---|---|
| கழிவறைத் தொகுதியின் ஒப்பந்தப் பிரகாரம் நிர்மாண வேலைகளைப் பூர்த்தி செய்து 05 மாதங்கள் கழிந்துள்ள போதிலும், நிர்மாணிக்கப்பட்டுள்ள கழிவறைகளின் கொங்கிரீட் உட்பகுதிக்க சாந்துபூசுதல் மற்றும் கதவுகளுக்கும் சுவர்களுக்கும் வர்ணம் பூசுதல் போன்ற நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை | | உபயோகப்படுத்தப்பட்டுக் கொண்டிருப்பதாகவும் அறியத் தரப்பட்டுள்ளது. |

## 3.3 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| அரசாங்கத்தின் வீடமைப்புத் திட்டங்களில் ஒன்றான “நில பியஸ“ திட்டத்தின் கீழ் கண்டி மாவட்டத்தின் ஆதாஹன மளுவ வீதி, அஸ்கிரியயில் அமைந்திருக்கும் அரச குடியிருப்புகளை முழுமையாக அகற்றி 04 மாடிகளைக் கொண்ட 08 வீடுகளை நிர்மாணிக்க 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 06 இல அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சுக்கும் ஒப்பந்ததாரருக்கும் இடையே ரூபா 87,900,000 பெறுமதி மதிப்பிடப்பட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. ஒப்பந்தப் பிரகாரம் 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் 13 ஆம் திகதி ஆகும்போது ஒப்பந்தந்தை நிறைவு செய்வதாக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த போதிலும், காணியின் உரிமையைத் தீர்த்து நிர்மாணப் பணிகளுக்காக ஒப்படைப்பது தாமதமடைதல், நிர்மாணத் திட்டங்களை இடைக்கிடையே மாற்றுதல், ஒப்பந்தத்தில் இருப்பை போதியளவு உள்ளடக்காதிருத்தல் போன்ற காரணங்களை முன்வைத்து 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையும் மூன்று தடவைகள் கால நீடிப்பைப் பெற்றுக் கொண்டுள்ள போதிலும், 2020 பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி வரையும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு மற்றும் உரிய விவரக் குறிப்புகளுக்கு ஏற்ப செயற்திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும். | வீட்டுத் தொகுதிக்கான மதிப்பீடுகளைத் தயாரித்தல், கொள்வனவு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், நிர்மாணப் பணிகளை மேற்பார்வை செய்தல் போன்ற அனைத்துக் காரியங்களையும் அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ மற்றும் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு ஆகியவை மேற்கொள்வதால் தாமதமாவது குறித்த விசாரணையை அமைச்சிடம் மேற்கொள்ளுமாறு அறியத் தரப்பட்டுள்ளது. |

## 3.4 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் தமது இலக்கிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை காட்டிய கணக்குப் பிரிவில் 2019 ஆம் ஆண்டில் அடைந்த செயன்முன்னேற்றம் செயலாற்றல் அறிக்கைகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட செயற் திட்டங்களுக்கு உரித்தான செயன் முன்னேற்றத்தை செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | தவறுதலாக வரைவு செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்படவில்லை. இறுதி செயலாற்றல் அறிக்கையில் தகவல் சேர்க்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. |
| (ஆ) அனர்த்த முகாமை, தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் அரச மொழிகள், விவசாய மற்றும் திட்டமிடல் ஆகிய துறைகளில் செயல் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள 15 செயற்திட்டங்களின் செயன் முன்னேற்றத்தை செயலாற்றல் அறிக்கை காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட செயற் திட்டங்களுக்கு உரித்தான செயன் முன்னேற்றத்தை செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | அனர்த்த முகாமைத்துவ பிரிவின் தரவு முறைமை நாளதுவரையாக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் செயலாற்றல் சேர்க்கப்பட்டுள்ளது. தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் அரச மொழிகள் பிரிவின் 18 செயற்பாடுகளின் செயன் முன்னேற்றத்தை செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. விவசாயத் துறையின் செயற்பாடுகள் சுருக்கமாக செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.<br><br>திட்டமிடல் துறையின் செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் செயன் முன்னேற்றத்தை தவறுதலாக செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்க தவறியிருந்தது. நடவடிக்கைத் திட்டத்தில் அச்செயன் முன்னேற்றம் உள்ளடக்கி செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பெறுகை துறையின் கீழ் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த மூன்று நிகழ்ச்சித்திட்டங்களுக்குரிய வருடாந்த இலக்ககுள் திருத்தம் செய்யப்படாமல் வருடாந்த செயலாற்றல் அறிக்கையில்வருடாந்த இலக்க மாற்றப்பட்டு காண்பிக்கப்பட்டதால் அந்தந்த செயற்திடடங்களுக்கு உரிய அடையக் கூடிய சென்முன்னேற்ற மட்டம் உள்ளவாறான இலக்கின் பிரகாரம் அடைந்த செயன்முன்றேற்றத்துடன் ஒப்பிடும் போது பாரியளவு கூடுதலான விலகல் அவதானிக்கப்பட்டது | திட்டமிடப்பட்ட செயற் திட்டங்களுக்காக வழங்கும் நிதிஏற்பாடுகளை உச்ச அளவில் பொதுமக்கள் சேவைகள் வழங்கும் விதத்தில் அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்ட முன்மொழிவுளில் குறிப்பிட்ட பிரகாரம் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வருடாந்த இலக்கு செயல் திட்டத்தின் படி, எவ்வாறாயினும், செயற் திட்டங்களை செயற்படுத்து வதில் அனைத்து முன்மொழியப்பட்ட திட்டங்களுக்கும் அங்கீகாரம் அளிக்காமை, சில திட்டங்களை செயல்படுத்த முடியாத நிலைமை அதாவது சூழல் பிரச்சினைகள், தேர்தல் காலத்தில் புதிய திட்டங்களைத் தொடங்குவது இடைநிறுத்தம் செய்தல் மற்றும் திருத்தப்பட்ட செயல் திட்டத்தை சமர்ப்பிக்க வேண்டியது போன்ற பிரச்சினைகள் காரணமாக இது மாற்றப்பட்டது. திருத்தப்பட்ட செயல் திட்டத்தை சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் செயல் திட்டத்தை சமர்ப்பிக்கத் தவறியதால் செயன் முன்னேற்றத்தில் குறைகள் தென்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. |

**3.5 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1(இ) வழிகாட்டலின் பிரகாரம் அடுத்த ஆண்டிற்கான பெறுகை செயற்பாடுகள் விரிவாக தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மாவட்ட செயலகத்தினால் அவ்வாறு தயாரிக்கப்படாமையால் பெறுகை இலக்கு எவ்வாறென்பதை தெளிவாக இனங்காண முடியாதுள்ளது. | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவை வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2001, 2002, 2003, 2102, 2103 மற்றும் 2401 செலவின விடயங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 21.3 மில்லியனாக இருந்ததுடன் அப்பணத்தை 21 அலுவலகங்களுக்காக எவ்வாறு பகிர்ந்தளிப்பது என்ற சிக்கலால் விரிவான திட்டம் தயாரிப்பதற்குப் பதிலாக செலவின விடயத்திற்காக மாத்திரம் தயாரிக்கப்பட்டதாக தெரியப்படுத்துகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | | | 2104 செலவின விடயன் கீழ் விரிவாக சமர்ப்பித்துள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | மாவட்டச் செயலகம் 2019 ஜுன் 30 திகதி திருத்தப்பட்ட பெறுகை திட்டத்தை தயாரித்திருந்தாலும், ஒவ்வொரு விடயத்திற்கும் தனித்தனியாக மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு நிதி ஒதுக்கீடு வெவ்வேறாக காண்பிக்கப்படும் வகையில் விரிவான தகவல்கள் அதில் உள்ளடக்காமையால் பெறுகை திட்டத்திலிருந்து எதிர்பார்த்த நோக்கங்கள் அடையப்படவில்லை. | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவை வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 06 செலவிக விடயங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 21.3 மில்லியனாக இருந்ததுடன் அப்பணத்தை 21 அலுவலகங்களுக்காக செலவின விடயங்களுக்கு எவ்வாறு பகிர்ந்தளிப்பது என்ற சிக்கலால்பிரதேச செயலகங்களுக்கு பகிரக்கூடிய தொகையை திட்டவட்டாககூறுவது சிரமமாகும். பிரதேச செயலகங்களில் காலரீதியான தேவைப்பாடு கருத்திற்கொள்ளப்பட்டு நிதிஏற்பாடு வழங்கும் முறையொன்று தற்போது பின்பற்றுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | ஒவ்வொரு பெறுகை ஆரம்பிப்பதிற்கும் நிறைவு செய்வதற்கும் திகதிகளை திட்டவட்டமாக மாவட்ட செயலகம் குறிப்பிட்டிருக்க வேண்டும் என்றாலும், அது பெறுகை திட்டத்தில் தெளிவாக அடையாளம் காணப்படவில்லை, மேலும் அது ”வருடத்திற்குள்” என்று மட்டுமே குறிப்பிடப்பட்டிருந்தது. | ஒவ்வொரு பெறுகை ஆரம்பிப்பதிற்கும் நிறைவு செய்வதற்கும் திகதிகளை திட்டவட்டமாக மாவட்ட செயலகம் திட்டமிட்டிருக்க வேண்டும். | 2104 என்ற செலவினத் தலைப்பில் 04 பிரதேச செயலகங்களில் கட்டிடங்களை நிர்மாணிப் பதற்கான பெறுகை அட்டவணைகள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், மற்ற மூலதன செலவின விடயங்களுக்கு விரிவான திட்டம் தயாரிக்கப்படாததால் பெறுகை கால அட்டவணை தயாரிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. |
| (ஈ) | சமர்ப்பிக்கப்பட்ட பெறுகைத் திட்டத்தில் அல்லது திருத்தப்பட்ட திட்டத்தில் பிரதேச செயலகங்களால் 2019 ஆம் ஆண்டில் 4 மூலதன செலவின விடயங்களின் கீழ் 11 பிரதேச செயலகங்களால் நிறைவேற்ற எதிர்பார்த்த ரூபா 6,315,851 வேலை விடயங்கள் குறித்த தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டில் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படும் மூலதன செலவு விடயங்கள் தொடர்பான அனைத்து செயற்திட்டங்களும் பெறுகை திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும். | 2001, 2002, 2003 ஆகிய செலவினப் விடயங்கள் மூலதன சொத்துக்களை கையேற்றல் மற்றும் மூலதன சொத்துக்களின் புனரமைப்பு மேம்படுத்தலுக்காக இருப்பதால் பெறுகை திட்டத்தில் சேர்க்கப் படவில்லை, ஏனெனில் அவற்றை 2020 ஆம் |

|  |  |  |
|---|---|---|
|  |  | ஆண்டில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மாவட்ட செயலகத்துக்குரிய 05 அரசாங்க வீடுகள் 6 மாதங்களுக்கும் 7 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக சிதைவுற்ற நிலையில் காணப்படுவதன் காரணமாக பாவனைக்கு எடுக்க முடியாமல் இருந்தன. அரசாங்கத்தின் வீடுகளைப் பெற்றுக் கொள்வதற்காக 72 உத்தியோகத்தர்கள் 06 ஆண்டு காலமாக தயாராக உள்ளவர்கள் பட்டியலில் இருந்த போதிலும் அந்த வீடுகளைப் பழுதுபார்த்து பாவனைக்கு ஏற்ற விதத்தில் மாற்றி உத்தியோகத்தர்களுக்கு வழங்குவது தொடர்பில் மாவட்ட செயலகம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | பகுதியாகவோ அல்லது திருத்தம் செய்வதற்காக நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டு திருத்தம் செய்வது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். | பழுதுபார்ப்பதற்காக பெறுமதி மதிப்பிடப்பட்ட போதிலும் போதியளவு நிதி ஒதுக்கீடு வழங்கப்படாத காரணத்தால் பழுதுபார்க்கும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படவில்லை என அறியத் தரப்பட்டுள்ளது. |
| (ஆ) மாவட்ட செயலகத்தினால் 2016, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 2,514,446, ரூபா 228,433 மற்றும் ரூபா 463,673 என அரசாங்கத்தின் வீடுகளைப் பழுதுபார்க்க செலவழிக்கப் பட்டிருந்த போதிலும், இது வரையில் கைவிடப்பட்ட நிலையிலுள்ள 05 வீடுகளுக்காக எவ்வித பழுது பார்க்கும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | அரசாங்க வீடுகளைப் பழுதுபார்த்து, சிதைவடைய இடமளிக்காமல் பாவனைக்கு எடுக்கக் கூடிய விதத்துக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | சிதைவடைந்த வீடுகள் 5 இற்கான மதிப்பீடு கூடிய பெறுமதியைக் கொண்டிருந்தமை மற்றும் போதியளவு நிதி ஒதுக்கீடு இருக்காத காரணத்தால் பழுதுபார்க்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலவில்லை என அறியத் தரப்பட்டுள்ளது. |

## 3.7 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைப்பு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1999 ஏப்ரல் 09 ஆந் திகதிய 1/99 ஆம் இலக்க பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் மற்றறும் பெருந்தோட்ட அமைச்சின் உள்ளக சுற்றறிக்கை மற்றும் 2008 திசெம்பர் 22 ஆந் திகதிய பொது நிர்வாக அலுவல்கள் அமைச்சின் HN/GN/4/2/1 பொது கடிதத்தின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் சாரதிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பிணை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மாவட்ட செயலகத்தின் சாரதியின் தனிப்பட்ட கோவை இதுவரை கிடைக்கவில்லை. அதனால் பிணை வைப்பினை மேற்கொள்ளவில்லையென அறவிக்கப்பட்டிருந்தது. |

## 3.8 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்கீட்டு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மோட்டார் வாகன சேதங்கள் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 3,418,095 பெறுமதியான இரண்டு வாகன விபத்துக்கள் 2019 இன் நிதிக்கூற்றுக்களில் ''நட்டங்கள் மற்றும் விட்டுவிடல் தொடர்பான கூற்றில் - குறிப்பு (i)'' இல் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அந்த 02 வாகன விபத்துக்கள் இன் ''நட்டங்கள் மற்றும் விட்டுவிடல் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்டன. |
| (ஆ) CPPC-4579 ஆம் இலக்க கண்டி மாவட்ட செயலகத்திற்குரிய குழாம் வாகனம் 2019 யூலை 21 ஆந் திகதி விபத்திற்கு உட்பட்டிருந்ததுடன் அது தொடர்பான தகவல்கள் வாகன விபத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்படாமல் இருந்ததுடன் அதற்குரிய பரிசோதனை நடவடிக்கைகள் முடிவடையாமையால் நட்டங்கள் தொடர்பான கூற்றிலும் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் சகல தகவல்களும் நிதிக்கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டும். | CPPC-4579 வாகனம் விபத்திற்குரிய நி.பி 104(4) இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | உடபலாத்த பிரதேச செயலகத்தின் CPPD-6103 ஆம் இலக்க வண்டி 2017 மே 05 ஆந் திகதி ஏற்பட்ட விபத்திற்குரியதாக ரூபா 2,223,927 கிரயமாக இருந்ததுடன் இதுவரை மேவுகை செய்யப்படாத ரூபா 210,093 நட்டத்தை பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடுவது தொடர்பாக அமைச்சின் 2019 ஆகஸ்ட் 5 ஆந் திகதிய HA/F/19/WRI/04/P-6 ஆம் இலக்க பிரதான கணக்காளரின் கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். . | CPPD-6103 ஆம் இலக்க வாகன விபத்து தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் வழக்கு தொடருவதற்குரிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் பேருந்தின் சாரதி மரணித்திருந்தது தாகவும் அது தொடர்பான தகவல்களை கடிதமொான்று மூலம் அறிய தருவதாகவும் அதன் பிரகாரம் எதிர் கால நவடிக்கைகளை சட்டமா அதிபர் திணைக்களத்தின் மூலம் அறிவிப்பதாகவும் தகவல்கள் நாளதுவரையாக்கப்பட்டு அறிக்கையிடுவதாகவும் பிரதேச செயலாளர் அறிவித்திருந்தார். |
| (ஈ) | கங்கஇஹல கோறளை பிரதேச செயலகத்திற்குரிய WPPA-4984 ஆம் இலக்க வண்டி 2008 நவம்பர் மாதம் விபத்திற்குட்பட்டிருந்தது. அதற்கான திருத்தச் செலவு ரூபா 288,348 ஆக இருந்ததுடன் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் அதில் 50 சத வீத பணத்தை பொறுப்பாக இருந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதும 2020 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை அந்தப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நட்டத்திற்கு பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கோவையின் பிரகாரம் 2020 மே 21 ஆந் திகதி ரூபா 50,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதாகவும் எஞ்சிய பணத்தை இரண்டு தவணையில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. |

### 3.9 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | உடபலாத்த, பாத்ததும்பற மற்றும் யட்டிநுவர பிரதேச | சுற்றறிக்கையின் பிரகாரம் மோட்டார் | உடபலாத பிரதேச செயலாளர் காரியாலயத்தின் பெண் |

| | | | |
|---|---|---|---|
| | செயலகங்களின் உத்தியோகத்தர்கள் 03 பேர் மோட்டார் சைக்கிளைப் பெற்றுக் கொண்டதன் பிறகு மோட்டார் சைக்கிள் உரித்தற்ற வேறு பதவிகளுக்கு மாற்றம் பெற்றுச் சென்றுள்ள போதிலும் 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04 ஆம் திகதிய BD/1/1/11/1/(உப)1/2017 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் அவர்களிடமிருந்து மோட்டார் சைக்கிளின் சந்தைப் பெறுமதியான ரூபா 421,920 பணத் தொகை மீள அறவிடப்பட்டிருக்கவில்லை. | சைக்கிளின் சந்தைப் பெறுமதி மீள அறவிடப்பட வேண்டும். | உத்தியோகத்தரிடம் உரிய அமைச்சினூடாக சில சந்தர்ப்பங்களில் அறியத் தந்துள்ளதோடு, சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும், யட்டிநுவர பெண் உத்தியோகத்தரிடமிருந்து பணத்தை அறவிட சட்ட மா அதிபர் திணைக்களத்தை நாடியிருப்பதாகவும், பாத்ததும்பற உத்தியோகத்தர் மோட்டார் சைக்கிளின் பெறுமதியை செலுத்துவதாகவும் அறியத் தரப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2019 நவம்பர் 22 ஆம் திகதிய BD/GPS/130/9/4/MC-8 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தின் பணிப்பாளரின் கடிதத்தின் 2 ஆம் பந்தியில் ஒரு உத்தியோகத்தருக்கு ஒரு மோட்டார் சைக்கிள் மாத்திரம் உரித்தாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், சலுகை அடிப்படையில் மோட்டார் சைக்கிள்களைப் பெற்றுக் கொண்டுள்ள துறையின் 06 உத்தியோகத்தர்கள் உள்ளூராட்சித் திணைக்களத்தின் மக்கள் தொடர்பாடல் உத்தியோகத்தர்களுக்கு சலுகை அடிப்படையில் வழங்கப்படும் மோட்டார் சைக்கிள்களையும் பெற்றுக் கொண்டிருந்தார்கள் (மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் உறுதிப்படுத்தியுள்ள விதத்தில்) எனினும், அவர்களில் ஒரு மோட்டார் சைக்கிளுக்கான சந்தைப் பெறுமதி அறவிடப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதியிட்ட கணக்காய்வு முகாமைத்துவ செயற்குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதாகவும், மாவட்ட செயலாளர் காரியாலயம் சட்டபூர்வமாக மோட்டார் சைக்கிளை வழங்கியிருப்பதாகவும், இரண்டாவது மோட்டார் சைக்கிளை உள்ளூராட்சித் திணைக்களிலிருந்து பெற்றுக் கொண்டுள்ளதால் பிரதான செயலாளரிடம் ஒப்படைக்கத் தீர்மானித்துள்ளதாக அறியத் தரப்பட்டுள்ளது. |

## 3.10 முகாமைத்துவ பலவீனங்கள்

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாதிரி சோதனையில் தும்பனை, மெததும்பர, தொளுவ மற்றும் பாத்தஹேவாஹெட்ட பிரதேச செயலகங்களில் 15 சந்தர்ப்பங்களில் காணிகளைக் கையேற்பது சம்பந்தமாக, 2 ஆண்டுகளிலிருந்து 23 ஆண்டுகள் கால தாமதம் காணப்படுவதோடு, அந்தக் காரணத்தால் இடங்களை கையேற்கப்பட்டதுடன் எதிர்பார்த்த இலக்குகளை அடைய முடியாமல் இருந்தது. | காணி ஆணைப் பத்திரத்தின் விதிமுறைகள் பிரகாரம் கையேற்றல் நடவடிக்கையை துரிதமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இடங்களைக் கையகப்படுத்தும் போது பல நிறுவனங்களைத் தொடர்பு கொள்ள வேண்டி இருப்பதால் அச் செயற்பாடுகளில் உத்தியோகபூர்வ தாமதம் நிகழ்வதாகவும், உரித்து மற்றும் இழப்பீட்டு சோதனையில் கால தாமதம் ஏற்படுவதாகவும் பிரதேச செயலாளர்கள் அறியத் தந்துள்ளார்கள். |
| (ஆ) | பாத்தஹேவாஹெட்ட பிரதேச செயலாளர் பிரிவின் 2013, 2014 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளில் அதிக ஆபத்துள்ள இடங்களில் குடியிருந்த, தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் வேறு இடங்களில் குடியிருக்க வைக்கப்பட்ட வேண்டிய 87 குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டிருந்தன. அவற்றிடையே 74 குடும்பங்கள் வேறு இடத்தில் குடியிருக்க தமது விருப்பத்தைத் தெரிவித்திருந்தன. எனினும், 2019 திசெம்பர் மாதம் வரையும் காணி கையகப்படுத்தல் சட்டத்தின் 07 ஆவது பிரிவின் கீழ் விளம்பரங்களை ஆங்கிலம் / தமிழ் ஆகிய மொழிகளுக்கு மொழிபெயர்ப்பு செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அதிக ஆபத்துள்ள இடங்களில் குடியிருக்கும், வேறு இடங்களில் குடியிருக்க விருப்பம் தெரிவித்துள்ள குடும்பங்களை உடனடியாக பொருத்தமான இடங்களில் குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அரசாங்க இடங்களில் குடியிருக்க அவர்கள் விருப்பம் தெரிவிக்காத காரணத்தால் கிராம சேவகர்களால் மாற்று வழிகளுக்காக விருப்பம் தெரிவித்த விதம் குறித்த தகவல்களைச் சேகரித்து மாவட்ட செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அறியத் தரப்பட்டுள்ளது. உரித்து சோதனை நடத்தல் கொவிட் 19 நோய்ப் பரவல் நிலைமை காரணமாக தாமதமாகி இருப்பதோடு அதற்காக தினம் குறிக்கப்பட்ட விளம்பரம் அரச அச்சகத்திடம் 2020 ஜூன் 19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அறியத் தரப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 01 ஆம் திகதியிட்ட இலக்கம் GSM/KRC/AGA/ 2018/36 உடைய புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்தின் செயலாளரின் கடிதம் பிரகாரம் ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் வரப் போகும் அடுத்த மாதம் 10 இல் அறவிடப்பட வேண்டிய நிர்வாகக் கட்டணத்தை வைத்துக் கொண்டு எஞ்சிய பணத்தை புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்துக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். எனினும், மாதிரி பரிசோதனையின் போது ஹதரலியத்த மற்றும் பாத்தஹேவாஹெட்ட பிரதேச செயலாளர் காரியாலயங்களில் மணல் மற்றும் மணி அனுமதிப் பத்திரங்களை வழங்கும் போது அறவிடப்பட்ட மொத்தப் பெறுமதி ரூபா 155,898 தொகை வருமானம் புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்துக்கு செலுத்திய போது 09 நாட்களுக்கும் 23 நாட்களுக்கும் இடைப்பட்ட கால தாமதம் காணப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | தாமதங்களை ஏற்றுக் கொண்டுள்ளதோடு வருங்காலத்தில் சுற்றறிக்கையின் பிரகாரம் தாமதமாகாமல் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுப்பதாக பிரதேச செயலாளர்கள் அறியத் தந்துள்ளார்கள். |
| (ஈ) | தும்பனை மற்றும் பாதஹேவாஹெட்ட பிரதேச செயலகங்கள் இரண்டிலும் அரசாங்கத்துக்குச் சொந்தமான 02 பேர்ச் இற்கும் 120 பேர்ச் இற்கும் இடையிலான இடத்தில் 75 அனுமதியற்ற குடியிருப்புகள் அல்லது அனுமதியற்ற பாவனைகள் அவதானிக்கப்பட்டன. | உத்தியோகத்தர்கள் தமது அலுவல்களை உரிய விதத்தில் நிறைவேற்ற வேண்டும். | இரு வார அறிக்கைகள் கிராம சேவகர்கள் மூலமாக பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் பற்றிய ஆவணமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்காக இடத்தை உறுதிப்படுத்துவதற்கு மாகாண காணி ஆணையாளரிடம் அனுப்பி வைப்பதற்கு, காணி கச்சேரி நடத்துவதற்கு, அபிவிருத்தி அறிக்கையைத் தயாரிப்பதற்கு, இடத்தை அளப்பதற்கு மற்றும் அளவிடும் ஆணைகளை அனுப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருப்பதாக பாத்தஹேவாஹெட்ட பிரதேச செயலாளர் அறியத் தந்துள்ளார். 2019 திசெம்பர் 19 |

| | | | |
|---|---|---|---|
| | | | ஆம் திகதி காணி கச்சேரியொன்றை நடத்தி அந்த இடத்தை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், அரசாங்க இடத்தை சட்டவிரோதமாகக் கைப்பற்றிக் கொள்வதைக் கட்டுப்படுத்த கிராம சேவகர் பிரிவு மட்டத்தில் மாதாந்த அறிக்கையைக் கோரியுள்ளதாகவும் தும்பனை பிரதேச செயலாளர் அறிக்கை அளித்துள்ளதாக அறியத் தரப்பட்டுள்ளது. |
| (உ) | 2010 மே மாதம் 22 ஆம் திகதியிட்ட இலக்கம் PF 443 உடைய அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மாதாந்த எரிபொருள் தேவைக்கு ஏற்ப கூட்டுறவு சங்கத்தில் வைப்புத் தொகையொன்றை வைத்து அந்த வைப்புத் தொகையின் பெறுமதியைத் தாண்டக் கூடாது என்ற அடிப்படையில் சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அரசாங்க நிறுவனங்கள் தமது எரிபொருள் தேவைகளைப் பெற்றுக் கொள்கையில் கூட்டுறவு சங்கங்களுக்குரிய எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்றும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. எனினும் கண்டி மாவட்ட செயலாளர் காரியாலயத்துக்கு எரிபொருள் பெற்றுக் கொள்ளப்பட்டதில் மேற்குறிப்பிட்ட வழிமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்கள் தமது அலுவல்களை சுற்றறிக்கையின் பிரகாரம் நிறைவேற்ற வேண்டும். | முன் எரிபொருள் கட்டளை வழிமுறையைப் பின்பற்றிய போதிலும் பல்வேறு சிக்கல்கள் காரணமாக அதைத் தவிர்க்க நேர்ந்தது. மீண்டும் பல்நோக்கு கூட்டுறவு சங்கம் மூலமாக எரிபொருளைப் பெற்றுக் கொள்ளும் சாத்தியக் கூறை ஆராய்ந்து, முகாமைத்துவ தீர்மானம் எடுத்து, செயற்படுத்த ஆலோசனை செய்வதாக அறியத் தரப்பட்டுள்ளது. |
| (ஊ) | கம்பெரலிய துரித அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் - பாதை மீளமைத்தல் திட்டத்தின் கீழ் இரண்டு கட்டங்களில் 96 பாதைகளை மேம்படுத்துவதற்கு ரூபா 51,588,445 தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. இந்த | உத்தியோகத்தர்கள் தமது அலுவல்களை உரிய விதத்தில் நிறைவேற்ற வேண்டும். | பாதைகள் அபிவிருத்தி பிரதேச சபையின் அனுமதி பிரகாரம் மேம்படுத்தப்பட்ட பிறகு மீண்டும் பிரதேச சபையிடம் ஒப்படைக்கப்பட்டன. அந்தப் பாதைகளை வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிப்பது |

| | | | |
|---|---|---|---|
| | நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட பாதைகளுக்காக உடபளாத பிரதேச சபை அனுமதியை வழங்கியிருந்த போதிலும், அதன் மூலமாக அபிவிருத்தி செய்யப்பட்ட பாதைகளில் அநேகமானவை வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டிருக்கவில்லை. | | பிரதேச சபையால் செய்யப்படுவதாக அறியத் தரப்பட்டுள்ளது. |
| (எ) | நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக மினிபே கூட்டுறவு சங்கத்திற்கு 2000 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்த ரூபா 4,303,617 பெறுமதியான முற்பணத்தில் 2020 ஜூன் 30 திகதி வரை ரூபா 1,231,687 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | 2012 மார்ச் மாதம் 22 ஆம் திகதி மற்றும் 2016 பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதிகளில் நடைபெற்ற அரசாங்க கணக்கு செயற்குழுவின் தீர்மானத்துக்கு ஏற்ப பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்தில் செயன்முன்னேற்ற மீளாய்வு செய்வதாக அறியத் தரப்பட்டுள்ளது. |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தின் சமய அலுவல்கள் பிரிவின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் அடைவதற்கு எதிர்ார்த்த இலக்குகள் அப்பரிவின் கீழ் காட்டப்பட்டிருந்த செயற்பாடுகள் பொருந்தாமல் இருந்ததுடன் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் ஊடாக நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ள இயலுமை காணப்படவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களையும் இலக்குகளையும் சரியாக தாபிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சமய அலுவல்கள் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் அடைந்து கொள்ளக்கூடிய எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளாக தவறொன்று காரணமாக உரித்தல்லாத இலக்குகள் உள்ளடக்கப்பட வேண்டிய போதும் இதுவர சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

**5.** **நல்லாளுகை**

**5.1** **பொதுமக்களுக்கு சேவைகளை நிறைவேற்றுதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 இன் 12 ஆம் இலக்க தகவல் அறியும் சட்டத்தின் 24(3) பிரிவின் பிரகாரம் ஏதேனும் வேண்டுகோள் கிடைத்தவுடன் உத்தியோகத்தரால் அந்த விண்ணப்பம் கிடைத்ததாக அறிவிக்கப்பட வேண்டியதுடன் மெததும்பர, பாதஹேவாஹட்ட மற்றும் தொழுவ பிரதேச செயலகங்களில் வேண்டுகோள் கிடைத்ததாக அறிவித்து அனுப்பும் போது 15 சந்தர்ப்பங்களில் 02 நாட்கள் முதல் 15 நாட்கள் வரையான காலதாமதமொன்று இடம் பெற்றிருந்தது. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தாமதங்களை தவிர்ப்பதற்காக பொருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப் பட்டிருந்தது |
| (ஆ) | 2016 இன் 12 ஆம் இலக்க தகவல் அறியும் சட்டத்தின் 25(1) பிரிவின் பிரகாரம் வேண்டுகோளொன்று கிடைத்து 14 வேலை நாட்களுக்குள் கேட்கப்படும் தகவல்கள் அல்லது சட்டத்தின் 05 ஆம் பிரிவில் காண்பிக்கப்பட்டுள்ள காரணங்களில் ஏதேனும் ஒரு காரணம் அல்லது அதற்கு மேற்பட்ட அளவுகள் அடிப்படையில் அந்த கோரல்களை நிராகரிக்க தீர்மானிக்கலாம். அத்தர்மானத்தை கோரிய நபருக்கு உடனே தொடர்பு கொள்ள வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதும் மாவட்ட செயலகம் மற்றும் பாதஹேவாஹட்ட பிரதேச செயலகம் அந்த எல்லையை விஞ்சி 4 நாட்கள் முதல் 49 நாட்கள் வரை தாமதித்து தகவல்களை வழங்கிய 04 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | தாமதமின்றி நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய வேண்டும் | பணக்கொடுப்பனவு நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்ககாலம எடுப்பதாலும் தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு வரும் காலதாமதம் இடம்பெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 6 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 ஆந் திகதி 305 வெற்றிடங்கள் காணப்பட்ட போதும் 2020 மார்ச் 31 இல் உள்ளவாறும் இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை | சிறந்த சேவையொன்றை வழங்குவதற்காக அத்தியவசிய வெற்றிடங்களைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | கொவிட் 19 தொற்று காரணமாக 2020 முதலாவது காலாண்டிற்குரிய கண்டி மாவட்ட செயலகத்தினதும் 20 பிரதேச செயலகத்தினதும் பதவியணியினதும் தகவல்களை நாளதுவரையாக்க முடியவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 ஆந் திகதி பிரதி திட்டமிடல் பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர், மொழி பெயர்ப்பாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள், தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஆகிய பதவிகளுக்காக கருத்திற் கொள்ளக்கூடிய அளவில் வெற்றிடங்களாக காணப்பட்டதுடன் அவ்வெற்றிடங்கள் நீண்டகாலமாக காணப்படுதல் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகம் என்பவற்றின் மூலம் நிறைவேற்ற வேண்டிய பொது சேவைகளை நிறைவேற்றுவதற்கு தடையொன்று ஏற்படுமென அவதானிக்கப்பட்டது. | சிறந்த சேவையொன்றை வழங்குவதற்காக அத்தியவசிய வெற்றிடங்களைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்ளக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் கிராம சேவையாளர்கள் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுகின்றன. |
| (இ) | 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கண்டி மாவட்டத்தின் 20 பிரதேச செயலகங்களில் 1187 கிராம சேவையாளர் பிரிவுகளில் 123 கிராம சேவையாளர்களுக்கான வெற்றிடங்கள் காணப்பட்டன. | சிறந்த சேவையொன்றை வழங்குவதற்காக அத்தியவசிய வெற்றிடங்களைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கண்டி மாவட்ட செயலகத்திலும் 20 பிரதேச செயலகங்களிலும் இடமாற்றக் கொள்கை சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் 325 உத்தியோகத்தர்கள் அதாவது ஒரே சேவை நிலையத்தில் வேலை செய்கின்றனர். | 2009 பெப்ரவரி 20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க (அதிவிசேட) வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயற்பாட்டுக்கோவை விதிகள் (1 வகையின் கீழ்) xviii ஆம் அத்தியாயத்தின் அரச உத்தியோகத்தர்களின் இடமாற்றம் தொடர்பான ஏற்பாடுகள் மற்றும் 2001 ஆகஸ்ட் 22 ஆந் திகதிய 18/2001 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை பிரகாரம் அரச இடமாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டும். | சில உத்தியோகததர்களால் இடமாற்றத்திற்காக ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் இடமாற்றக் கொள்கையின் கீழ் கோரப்பட்டிருந்த போதும் இடமாற்றம் வழங்கப்பட்டிருக்கவில்லை இடமாற்றம் கோராத உத்தியோகத்தர்களின் சேவைக்காலம் பூர்த்தி செய்தவர்கள் ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளருக்கு அனுப்பியுள்ளதாக |
| (உ) | கண்டி மாவட்ட செயலகத்திலும் 15 பிரதேச செயலகங்களிலும் தகுதிகாண் காலத்தில் வினைத் திறமைகாண் தடைப்பரீட்சை சித்தியடைந்த 60 உத்தியோகத்தர்களின் தகுதிகாண் காலம் கடந்து 2019 திசெம்பர் 31 இல் 3 ஆண்டு சேவையில் நிரந்தரமாக்கப்பட்டிருக்கவில்லை.<br>கண்டி மாவட்ட செயலகத்திலும் 17 பிரதேச செயலகங்களிலும் தகுதிகாண் காலத்தின் பின்னர் வினைத் திறமைகாண் தடைப் பரீட்சை சித்தியடைந்த 169 உத்தியோகத்தர்கள் 2019 திசெம்பர் 31 வரை வினைத் திறமைகாண் தடைப் பரீட்சை சித்தியடைந்து 1 வருடம் 6 மாங்களுக்கும் 3 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலம் சேவை பரிந்த போதும் அவர்களை சேவையில் நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | வினைத் திறமைகாண் தடைப்பரீட்சை உத்தியோகத்தர்களின் சேவையை விரைவில் நிரந்தரமாக்க நடவடிக்கை எடுத்தல். | மாவட்ட செயலகத்திலும் பிரதேச செயலகங்களிலும் சில அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வினைத் திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தியடைந்து சேவையில் நிரந்தரமாக்குவதற்காக ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளதுடன் சல உத்தியோகத்தர்களின் கோவைகளில் குறைபாடுகள் காணப்படுவதாகவும் அவை தயார் செய்யப்பட்டு வருவதாகவும் |